# புதிய உலகம்

## "கிறிஸ்மஸ்" சிறப்பிதழ்

1981



எமது வாசக நேயர்களுக்கு
அன்பு கனிந்த நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்


ஐந்தாவது ஆண்டு

மலர் : 30

கார்த்திகை — மார்கழி 1981

பொறுப்பாசிரியர் :
ஜே. நீக்கலஸ்

துணை ஆசிரியர் :
நாவண்ணன்

விநியோகப் பொறுப்பாளர் :
பிரான்சிஸ் டானியல்

வெளியீடு :
கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

தொடர்பு :
''புதிய உலகம்''
த. பெ. எண் 2,
யாழ்ப்பாணம்.

"PUTHIYA ULAGAM,"
P. O. Box 2
Jaffna.

விலை ரூபா 1-50
ஆண்டுச் சந்தா 10-00


சிந்தனையூட்டும் சஞ்சிகை

ஆசிரியர் — வெளியீட்டாளர்

# புதிய உலகிலே..


| | பக்கம் |
|---|---|
| எமது பார்வை ... | 1 |
| மறை இயல் .. | 3 |
| வாசகர் வழங்கியவை .. | 6 |
| சிறுவர் உலகு .. | 8 |
| அந்தக் கழுதை கதை சொல்லுகிறது .. | 10 |
| விண்மீன் தெரியவில்லை .. | 13 |
| இந்த முரண்பாடுகள் இன்னும் ஏனோ .. | 15 |
| மீட்பு என்றோ? .. | 17 |
| குறுக்கெழுத்துப் போட்டி.. | 26 |
| எதிர்பார்ப்புக்களும் ஏமாற்றங்களும் .. | 28 |
| கருத்துமோதல் .. | 30 |
| பிறப்பெடுப்போம் .. | 37 |
| எண்ணங்கள் மாற்றப்படும்போது .. | 38 |
| அர்த்தமுள்ளதாக்குவோம். | 43 |
| புதுமைப் பதில் .. | 45 |
| உங்கள் பார்வை .. | 47 |



படைப்புகளுக்குப் பொறுப்பு படைத்தவர்களே;
கருத்துகளுக்கு உரியவர்கள் உரைத்தவர்களே ஆ—ர்

(FOR PRIVATE CIRCULATION ONLY)

Miss Kalaiarasy Nadarajah

# எமது பார்வை

## விழாக்கோலம் போதுமா ?

மார்கழி மாதமென்றால் கிறிஸ்மஸ் எண்ணம்தான் அனைவரது உள்ளங்களிலும் அலைமோதி நிற்கும். ஒளி விழாக்களை மூலைமுடுக்கெல்லாம் கொண்டாடத் தொடங்கி விடுவர். ஒளி விழா! இல்லை! அது கலை விழா!!! விழா வென்றால் மகிழ்ச்சி வேண்டாமா. ஆடல்கள் பாடல்கள், போட்டிகள், பரிசுகள் இத்தனையும் ஒளி விழா விழாவின் சிறப்பு நிகழ்ச்சிகள். அர்த்தமறியாது விழாவெடுத்து என்ன பயன்? காலத்தின் கோலத்தை மறந்து மக்களின் வாழ்க்கை நிலையை மறந்து விழாக்கோலம் கொள்வதின் கருத்து என்ன?

## விலையேற்றத்தில் விழாவா ?

1981-ம் ஆண்டு பல சிக்கல்களும் தொல்லைகளும் நிறைந்த ஆண்டாகவே தோன்றுகிறது. வாழ்க்கையென்பது ஒரு விசித்திரம்தான். பொருளாதாரம் ஓயாத ஒரு போராக மாறிவிட்டது. விலைவாசி உயர்வு மக்களை ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருக்கின்றது. வாழ்வை உயர்த்திவைக்கும் பணம், மனிதனைத் தோல்வியடையவும் செய்கிறது. கண்ணை மூடித் திறப்பதற்குமுன் வாயிலே மண்ணை வாரிப் போட்டது போலவே இன்று பொருட்களின் விலை உயர்ந்து கொண்டுபோகிறது.

## தமிழனின் நிலை இதுதானா ?

பனையாலே விழுந்தவனை மாடு மிதித்தது போன்றே இன்று நம்நாட்டிலே தமிழன் நிலை மாறியுள்ளது. எங்கு அடிவிழப்போகிறது, எப்போ அடிவிழப்போகிறது என்ற ஒரு பதட்டநிலை உருவாகியுள்ளது. சுயாதீனமாய் வீதிகளிலே நடமாட முடியாத நிலை. பயமின்றிப் பயணம் செய்யமுடியாத சூழ்நிலை. சுதந்திரமாக வீட்டிற்குள்ளும் இருக்கமுடியாத ஒரு காலம். யாரை நம்புவது? யாரிடம் உதவி கேட்பது என்றே தெரியாக் காலம். பாதுகாப்

பளிக்கவேண்டியவர்களே நஞ்சுப் பாம்பாகச் சிறிப்பாயும் நயவஞ்சகர்களாக மாறியுள்ள காலம் இது.

## இயற்கையும் இரங்கவில்லையே !

இயற்கைதானும் தமிழனுக்கு இரக்கம் காட்டவில்லை யென்பதைக் காணும்போது கண்ணீர் விட்டழுதாலும் ஆறுதல் கிடையாது. அண்மையிலே ஓயாது பெய்த பேய் மழை 15,000 க்கு மேற்பட்ட மக்களின் வீடுகளை விழுங்கி விட்டது. இப்பாதிப்புக்குள்ளான மக்களுக்கு வாழ்வு கொடுப்பதே நம்மனைவரினதும் தலையாயகடமையென்பதை நாம் உணர்ந்து செயல்படவேண்டும்.

## புதுவழி காண்போம் !

இப்படியான இருள் சூழ்ந்த வாழ்விலே தமிழன் தத்தளிக்கும் நேரத்திலே கிறிஸ்மஸ் என்னும் ஒளி விழா எமக்கு கூறும் செய்தியென்ன. இனி எமக்கு வாழ்வில்லை, விடிவு இல்லை, இத்தொல்லைகளுக்கும், அநியாயங்களுக்கும் முடிவில்லை என்று அபயக்குரல் எழுப்புகின்ற தமிழனுக்கு தன்நம்பிக்கையூட்டும் ஒளியைக் கண்டு அமைதிபெற இவ் விழா வழிவகுக்கட்டும் தடைகளைத் தகர்த்தெறிந்து புது வாழ்வுக்கு வழிகாட்டட்டும். இவ்வொளி விழா! கடந்த வைகளை நினைந்து கவலையிலே மூழ்கி வாழ்நாளை வீணாக்காது வருங்காலத்தை வளமாக்கப் புத்துயிர் அளிப்பதாக அமை யட்டும் கிறிஸ்மஸ் விழா.

## வாழ்த்துகின்றோம் !

உலகிலே இருள்போக்கி, அருள் ஒளியாய் அனைவருக் கும் தன் அன்பினை எண்பித்த அண்ணல் இயேசுவின் பிறப்பு விழாவை மகிழ்வோடு எதிர்பார்க்கின்றோம். இவ் விழா அனைவருக்கும் அன்பையும், அமைதியையும் அளிப் பதாக.

மலரும் புத்தாண்டு நம்மனைவருக்கும் மனநிறைவைத் தந்து வாழ்வு சிறக்க வழிவகுப்பதாக. புதிய உலகத்தின் அன்பர்கள் அனைவருக்கும் எம் இதயம் நிறைந்த நன்றியை யும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

ஜே. நீக்கிலஸ்
ஆசிரியர்




# மாட்டுத்தொழுவத்தை மறந்துவிட்டோமா?

நம்மிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருக்கும் 1981-ம் ஆண்டில் எண்ணிலடங்கா கொலைகள், கொலை முயற்சிகள். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர், அமெரிக்கத் தலைவர் ரீகன் ஆகியோர் மயிரிழையில் உயிர் தப்பினார்கள். உலகமே அதிர்ந்தது!

மத்திய கிழக்கின் அமைதிக்காக உழைத்த எகிப்திய தலைவர் அன்வர் சதாத் இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டிருக்கையில் மிருகத்தனமாகக் கொல்லப்பட்டார். மத்திய கிழக்கு அமைதியிழந்தது!

நியூட்ரோன் அணு ஆயுதங்களைத் தயாரிக்குமாறு உத்தரவு பிறப்பித்தார் அமெரிக்கத் தலைவர். அவரது நாட்டில் மட்டுமல்ல ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் அவரது கொள்கையைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள் — உலகமே இன்று அமைதியிழந்து தவிக்கிறது!

இந்திய நாட்டின் விடுதலைக்காகத் தன்னையே அர்ப்பணித்தவர்; மக்களை அகிம்சை என்னும் கொடியின்கீழ் அணிதிரட்டியவர் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானார். இந்திய நாடு தவித்தது!

''உன்னதங்களிலே கடவுளுக்கு அமைதியுமில்லை. இவ்வுலகில் அவர் தயவு பெற்றவர்களுக்கு அமைதியுமில்லை'' என வானோர் கீதத்திற்கு நேர்மாறான கருத்தை வலியுறுத்தினார் அண்ணல் காந்தி.

''உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமையுண்டாகுக. இவ்வுலகில் அவர் தயவு பெற்றவர்களுக்கு அமைதியுமாகுக'' (லூக் 2:14) கிறிஸ்து பிறந்த வேளையில் வானவர் பாடிய கீதமென நற்செய்தியாளர்கள் வர்ணிக்கிறார்கள்.

நீதியின் அரசர் (இசை. 42:3) சமாதானத்தின் தூதர் (இசை: 9:6) என்றெல்லாம் இறைவாக்கினரால் முன்னுரைக்கப்பட்ட கிறீஸ்துவின் பிறந்த தினத்தை திரும்பவும் கொண்டாடுகிறோம். எத்தனையோ ஆண்டுகளாகக் கொண்டாடி வருகிறோம்.

வாழ்வளிக்க வந்த சமாதானத்தின் தூதர். ஆசியாவில் — பலஸ்தீனாவில் — பெத்லேகத்தில் — மாட்டுக் கொட்டிலில் பிறந்

தார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் ஆசியக் கண்டம் மாட்டுக் கொட்டிலாகத்தானே இருக்கிறது. உறைவிடமற்றவர்கள் எத்தனை? அகதிகள் எத்தனை? அரை வயிற்றோடு படுக்கைக்குச் சென்று தூங்க முடியாமல் தவிப்பவர்கள் எத்தனை?

பாதுகாப்பு என்ற போர்வையில் பிச்சையெடுத்த பணத்தில் ஆயுதங்களை வாங்கிக் குவிக்கும் நாடுகள் எத்தனை? இப்பல வினத்தை தங்களுக்குச் சாதகமாகப் பாவித்து இந்து மகா சமுத்திரத்தில் இடந்தேட வல்லரசுகள் போட்டியிடும் விந்தைதான் என்ன?

நாடுகள் மத்தியிலே போர் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. நாட்டைக் காக்கிறோம் என்று சொல்லி பள்ளி மாணவர்கள் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு ஆயுதம் ஏந்துகிறார்கள். எங்கும் மரண ஓலங்கள்! காரணம் என்ன?

கிறீஸ்து பிறப்பு விழாவை மீண்டும் மீண்டும் கொண்டாடுகிறோம். ஆனால் கிறீஸ்துவை அறியவில்லை. மாட்டுக் கொட்டிலில் பிறந்தவரை மனுமகனுக்கோ தலைசாய்க்க இடமில்லை; (லூக். 9:58) என்றவரை மறந்தே விட்டோம். மக்களோடு மக்களாக வாழ்ந்தவரை சீடர்களின் பாதங்களைக் கழுவியவரை மறந்தேவிட்டோம். 'நீ அரசன் தானா?' என நீதி மன்றத்தில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட வேளையில் ''அது நீர் கூறும் வார்த்தை'' (அரு. 18:37) எனப் பதிலடி கொடுத்து அரசு உரிமையோ பட்டம் பதவியோ வேண்டாம் என்றவரை மறந்தே விட்டோம்.

வாண வேடிக்கைகள், வெளிச்சக்கூடுகள், பட்டாடைகள், பட்டாசுகள் என்று சொல்லி வெளிக் கொண்டாட்டத்தில் மாட்டுக் கொட்டிலை மறந்தேவிட்டோம். ஆணிகளைத் தாங்கிய கரங்களில் செங்கோலைக் கொடுத்தோம். முள்முடி ஏந்திய தலையில் பொன் முடி வைத்தோம். தன் ஆடைகளையே தன் எதிரிகளுக்கு பங்கிட்டுக் கொடுத்தவருக்கு பொன்னுடை போர்த்தினோம். சிலுவையை மறந்தோம். மாட்டுக் கொட்டிலை மறந்தோம். அவரது விருப்பத்திற்கு மாறாக அவரை அரசராக்கிவிட்டோம்.

இப்புதிய கோலம் எதற்காக?

நாம் கொண்ட கோலத்திற்கு, நமது சுயநல வாழ்விற்கு, பட்டம் பதவி கொண்ட அதிகார வெறிபிடித்த வாழ்வுக்கு அவரை ஒரு முகமூடியாகப் பாவிப்பதற்கு அவரது கோலத்தையே மாற்றிவிட்டோம்.

இதன் விளைவு — சிலுவை யுத்தங்கள், போர்கள் மரண ஓலங்கள்.

போர்களை நிறுத்த, மரண ஓலங்களை ஒழிக்க, செல்வங்களைப் பகிர, பசிப்பிணியைப் போக்க கருத்தரங்குகள் மகாநாடுகள் கூட்டப்படுகின்றன. இந்த ஆண்டில்கூட மெல்போர்ன் மகாநாடு என்றும், கங்கூன் மகாநாடு என்றும் நாட்டின் தலைவர்கள் கூடினர்கள். போர்மேகங்கள் அகன்றதா? பசி தீர்ந்ததா? பசித்த நாடுகளுக்கு வல்லரசுகள் ஏதோ பிச்சை போட்டது உண்மை தான். ஆனால் இப்பணம் பெரும் பாலும் ஆயுதங்கள் வாங்கவே பாவிக்கப்பட்டது. ஆயுதங்கள் பசியைத் தீரா, போட்டியை வளர்க்கும். அமைதியைக் குலைக்கும்.

''நான் தரும் சமாதானம் உலகம் தரும் சமாதானம் போலன்று'' (அரு. 14:24)என்று தத்துவம் பேசினர் கிறீஸ்து. இந்த சமாதானத்தை இவ்வுலகம். இச்சமுதாயம் அனுபவிக்க வேண்டுமென்றால் இச்சமாதானத்தை தனி மனிதன் தன் உள்ளத்தில் முதலில் உணர்ந்தே யாகவேண்டும். கிறீஸ்து தரும் சமாதானம் செங்கோலில் அல்ல-முள்முடியில்; அடக்கி ஆள்வதில் அல்ல - பணிபுரிந்து வாழ்வதில்; சுயநலத்தோடு வாழ்வதில் அல்ல-பொதுநலனுக்காக தன்னையே அழிப்பதில்; எல்லையை அகட்டி மாடமாளிகை கட்டுவதில் அல்ல - மாட்டுக் கொட்டிலில் கிடைப்பதைக் கொண்டு திருப்தியாக வாழ்வதில் உண்டு என்பதை தனிமனிதன் உணர்ந்தால் அங்கே அமைதி பிறக்கும்.

அயலவனோடு சண்டையிட்டதால், கோடேறியதால் ஏற்பட்ட அழிவுகளைச் சற்றுச் சிந்தித்தால், கடந்த போர்களினால் ஏற்பட்ட கண்ணீர்க் கதைகளை நமது உள்ளங்களில் மீட்டுப் பார்த்தால் போரின் கொடுமை நமக்குப் புரியும். அமைதி பிறக்க வழி வகுக்கும் மகாநாடுகளுக்கு முன்னர் மனிதனின் மனமாற்றம் தான் உலக அமைதிக்கு வழி வகுக்கும்.

மனிதன் அமைதியோடு வாழ்ந்தால் மகிழ்வுற்ற சமுதாயம் உருவாகும். கடவுளுக்கும் மகிமை உண்டாகும்.

---

**அருட்திரு. சிங்கராயர், அ. ம. தி.**

---

# வாசகர் வழங்கியவை

சென்ற இதழில் உங்களைத்தான் கேட்கிறோம் பகுதியின் வினாக்களுக்கு வாசகர்கள் வழங்கிய விடைகளின் தொகுப்பை இங்கே தருகின்றோம்,

★ புதிய ஆண்டுமுதல் புதிய உலகத்தினை மாதசஞ்சிகையாகவும் விலை அதிகரித்தும் வெளியீடு செய்வதற்கு 99% மான புதிய உலக வாசகர்களின் ஆதரவு கிடைத்துள்ளது. எஞ்சிய 1% தினரில் விலை கூட்டவேண்டாமென்பவரும் மாதசஞ்சிகை ஆக்கவேண்டாமென்பவரும் அடங்குகின்றனர். நாம் பெரும்பான்மையானவர்களின் கருத்துக்களினையே ஏற்றுக்கொள்கின்றோம்.

★ இதழில் இடம்பெறவேண்டிய மாற்றங்கள்குறித்து சிலர் கருத்துக்கள் எதுவும் தெரிவிக்கவில்லை. சிலர் இருக்கும் நிலையிலேயே திருப்தி கண்டுவிட்டனர். இந்தக் கட்டுக்களைத்தாண்டி புதிய பல ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. அவை வருமாறு:

★ விஞ்ஞானம் விவசாயம், பொருளாதாரம் தொடர்பான அறிவியல் கட்டுரைகள், விமர்சனக் கட்டுரைகள்.

★ மாணவர் சிந்தனைக்குரிய விடயங்கள், இளைஞர்பகுதி.

★ நகைச்சுவைத் துணுக்குகள்.

★ தொடர்கதை, தொடர் நாடகம்.

★ பொது அறிவுப் போட்டி.

★ குறுக்கெழுத்துப் போட்டி.

★ சிறப்புப் பேட்டி.

★ மனித சமூகத்தின் இன்றைய நிலைபற்றிய தகவல்கள்.

★ உலகளாவிய ரீதியில் தமிழினத்தின் இன்றைய நிலை.

★ நண்பர் அறிமுகம்.

★ செய்தித் துணுக்குகள்

★ மறையியல் வினுவிடை.

★ வர்த்தக விளம்பரங்களைச் சேர்த்தல்.

மேற்படி கருத்துக்களைத் தெரிவித்த அனைவருக்கும் புதிய உலகம் வெளியீட்டுக்குழு சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதேவேளை வாசகர்கள் புதிய உலகத்தைப் படிப்பவர்களாக மட்டும் இராமல், படைப்பவர்களாகவும் பங்கெடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கின்றோம். புதிய உலகை நெறிப்படுத்தும் ஆக்கங்களின் படைப்பாளிகள் தாங்களே என்பதை வாசகர்கள் மறந்துவிடுவது வேதனைக்குரியதே. குறிப்பாக மிக நீண்ட காலமாக "இளைஞர் உலகம்" பகுதி வெளிவராமல் இருப்பது எமது இளம் வாசகர்களின் சிந்தனை வறுமையையும், படைப்பாற்றலின் குறைபாட்டையுமே குறிக்கின்றன. தங்கள் வளமான சிந்தனையில் விளையும் நலமான படைப்புக்களால் புதிய உலகம் புதுஆழம் காணுமென்று புத்தாண்டில் நம்புகின்றோம். மாத இதழாக மலரஇருப்பதால் வாசகர்கள்—நிர்வாகிகள் அனைவருமே செயற்பாட்டின் வேகத்தை அதிகரிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இதனை உணர்ந்து தங்கள் பூரண ஒத்துழைப்பை நல்குவீர்கள்என எதிர்பார்க்கின்றோம். விளம்பர விடயத்தில் இலங்கை முழுதும் உள்ள எமது வாசகர்கங் உற்சாகமாக செயற்படின் சஞ்சிகையை சிறப்புற அமைக்கமுடியும். மீண்டும் படைப்புக்களை எதிர்பார்த்து, கருத்துக்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறோம்.

— ஆசிரியர் வெளியீட்டாளர்.

●

## நகைச் சுவைத் துணுக்குகள்

ஒருவர் : [பத்திரிகை பார்த்தபடி] இலங்கை இளைஞர்கள் ஈரானுக்கும் வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறார்கள்.

மற்றவர் : இலங்கை முன்னேறிவிட்டது என்று சகோதர பாசத்தால் வெளிநாட்டை முன்னேற்ற அனுப்புறாங்கள் போல.

●

பொலீஸ் : அடுத்த வீட்டுப் பூட்டை ஏன் உடைத்தாய்?

திருடன் : நான் கொண்டுபோன சாவி ஒன்றும் அதுக்கு சரியில்லாததால் உடைத்தேன்.

விக்ரர் — குமார்

# சிறுவர் உலகு

## சீன நாட்டுக் கதை

முன்னொரு காலத்தில் ஒரு முட்டாள் இருந்தான். ''பேரிப் பழம் பல்லுக்கு நல்லது, மண்ணீரலுக்கு கூடாது; பேரீச்சம் பழம் மண்ணீரலுக்கு நல்லது, பல்லுக்கு கூடாது'' என்று யாரோ சொல்வதை அவன் கேட்டான்.

அவன் சற்று நேரம் யோசித்த பின் '' இன்று முதல்; நான் பேரிப் பழத்தைச் சாப்பிடும் போது அதைச் சப்புவதுடன் நிறுத்திக் கொள்வேன்; விழுங்க மாட்டேன். பேரீச்சம் பழத்தை சாப்பிடும் போது அதனை முழுதாக விழுங்குவேன்'' என்று முடிவு செய்து கொண்டான்.

[பீக்கிங் வானொலி ஒலிபரப்பிலிருந்து]

## ஒரு குழவியை ஊசியாகத் தேய்க்கலாம்

முன்னொரு காலத்தில் பள்ளிப் பையன் ஒருவன் வீதியில் விளையாடிக் கொண்டிருந்த போது கிழவி ஒருத்தி இரும்புக்குழவி ஒன்றை கல்லொன்றில் தேய்ப்பதைக் கண்டான். ஆவல் தூண்ட அவன் கிழவியிடம் ''என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டான்.

''நான் இந்தக் குழவியைத் துணி தைப்பதற்கான ஊசியாக்கப் போகிறேன்'' என்று கிழவி பதிலளித்தாள். பையன் சிரித்துக் கொண்டே, ''இது ஒரு பெரிய குழவி, இதனை எப்படி ஊசியாக தேய்க்கப் போகின்றாய்?'' என்றான்.

''பெரிதென்றாலும் பரவாயில்லை. நான் தேய்ப்பேன்; நாளை மீண்டும் தேய்ப்பேன்; நாளை மறுநாளும் தேய்ப்பேன், தினமும் குழவி சிறிதாகும். ஒரு நாள் அது ஊசியாகும்.'' என்று பதில் வந்தது.

முயற்சி திருவினையாக்கும்.

[பீக்கிங் வானொலி நிலைய ஒலிபரப்பிலிருந்து]

**R. S. Selvaratnam**

**(1) தந்தைக்குச் சமமானவர் கள்:—**

தன்னை வளர்த்தவன், கல்வி கற்பித்தவன், மறை கற்பித்தவன், அரசன், மத குருக்கள், உற்ற இடத்தில் உதவியவன், தமையன் மனைவியின் தந்தை, வறுமையை நீக்கியவன் வருத்தத்தைப் போக்கியவன், ஆகியோரே ஒருவரின் தந்தை அந்தஸ்தில் வைத்து எண்ணத் தக்கவர்கள் ஆவர்.

**(2) குழந்தைகளுக்குப் பல்வலி ஏற்பட்டால் கறியுப்பை உபயோகித்துப் பல் துலக்குவதன் காரணம் யாது?**

குழந்தைகள் ஆசையோடு அள்ளி உண்ணும் இனிப்புப் பண்டங்கள் போன்ற பண்டங்கள் அவர்களின் பல் ஈறுகளில் தங்கிவிடுகின்றன. சவ்வூடு பரவல் தத்துவத்தின் மூலம் உடல் நீர்கள் வெல்லப் பொருட்களுக்கு பரவுகின்றன. அப்பொழுது அங்கே வீக்கம் ஏற்படும். எனவே கறியுப்பை உபயோகித்துப் பல் துலக்கும் போது வெல்லப் பொருட்கள் அகற்றப்பட்டுவிடுகின்றன.

**(3) அலுமினியம், செம்பு போன்ற உலோகங்களால் ஆக்கப்பட்ட குடங்களில் உள்ள நீரை விட மண்குடத்தில் உள்ள நீர் குளிர்மையாக இருப்பதால் நாம் அதை விரும்பிப் பருகிறோம். அந் நீரின் அக் குளிர்ச்சிக்கு காரணம் என்ன?**

மண் குடத்தில் நுண்துளைகள் இருக்கின்றன. அந் நுண் துளைகளின் ஊடாக நீர் ஆவியாகிச் செல்லத் தேவையான வெப்பத்தைக் குடத்து நீரினுள் இருந்தே எடுக்கிறது. எனவே குடத்து நீர் குளிர்ச்சியாக இருக்கிறது.

## வாராயே நீ

அன்னை மரி மடியினில்
அற்புத பாலனாய்
அவதரிப்பாய் நம் மத்தியில் என
ஆசையோடு காத்திருக்கின்றோம்
யாம் செய்த பாவத்தை மன்னித்து
எம்மை மீட்பதற்காகவே
வருவாய் என நினைத்து
வரவேற்கின்றோம் மைந்தர் நாம்
வாராயோ நீ

செல்வன்: அ. றஞ்ஜிற் பிள்ளைநாயகம்
யாழ்ப்பாணம்.

# அந்தக் கழுதை

# கதை சொல்லுகிறது

என்னுடைய பெயர் டிங்கி. நான் ஒரு கோவேறு கழுதை. நான் என் வாழ்நாள் பூராவும் நசரேத் என்ற சிற்றூரில் வாழ்ந்திருக்கின்றேன். நான் எங்கே தூங்குவேன் தெரியுமா? சூசை என்றவொரு தச்சர் ஒரு சிறு தொழிற்கூடம் வைத்திருந்தார். அதன் பக்கத்தில் ஒரு சிறு குடில் போல் கட்டியிருந்தார்கள். அதில்தான் நான் நித்திரை கொள்ளுவேன்.

நான் ஒவ்வொருநாளும் சூசையப்பராம் எனது எஜமானருக்கு உதவி செய்வேன். ஆமாம், ஒரு கழுதை செய்யவேண்டிய எல்லா வேலைகளையும் சாதாரணமாகவே செய்வேன். சந்தோஷமாகவே செய்வேன். ஏனென்றால், என் எசமானர் மிகமிக நல்லவர், கருணை நிறைந்தவர், பாசமும் பற்றுமுள்ளவர்.

சூசையப்பரின் மனைவியின் பெயர் மேரி. ஓ... அவளைப்பற்றி நினைக்கும்போது என் மனம் காற்றில் நின்றுடும் மெல்லிய கடதாசியாய் இதமடைகின்றது. என்ன கருணை, என்ன அன்பு, என்ன பண்பு, என்ன பாசம். எசமானி என்றால் எசமானிதான்.

எனக்குச் சுமார் மூன்று வயதாய் இருக்கும்போது, ஒருநாள் எங்கள் கிராமத்துக்கு சிலர் வந்தார்கள். சுவர்களில் சில அறிக்கைகள் எழுதினார்கள். தண்டோரா அடித்து அறிவிக்கவும் செய்தார்கள். சூசை அவைகளை வாசித்துவிட்டுத் தன் மனைவியாகிய மேரியிடம் வந்து அதுபற்றிக் கூறினார்.

''மேரி, நாம் பெத்லகேமுக்குப் போகவேண்டி இருக்கிறது. ஏனென்றால், ஆட் கணக்கு எடுக்கிறார்களாம்; ஒவ்வொருவரும் அவரவர் பிறந்த ஊருக்கே போய் பெயர் பதிந்துவிட்டு வரவேண்டும்'' என்றார் சூசையப்பர்.

அடுத்தநாள் சூசை நானிருந்த சிறு தொழுவத்துக்கு வந்து, நன்றாக என்னைச் சுத்தமாக்கி, நீண்ட அந்தப் பயணத்துக்குத் தயாராக்கினார்; அவர்களும் தயாரானார் அவர்களின் உணவு, மற்றும் உடை போன்றவற்றை என் முதுகின்மேல் வைத்துக் கட்டியபிறகு மேரியம்மா என் முதுகின்மேல் ஏறுவதற்குச் சூசையப்பர் உதவி செய்தார்.

நாங்கள் புறப்பட்டோம்.

அது ஒரு நீண்ட பயணம். எனக்கு மிகக் களைப்பாகத்தா

னிருந்தது. ஆனால், மேரியும் எஜமானரும் எனக்கு ஆறுதல் வார்த்தைகள் சொன்னார்கள். அடிக்கொருமுறை என் முதுகில் செல்லமாகத் தட்டினார்கள். அந்நேரமெல்லாம் என் உள்ளம் குளிர்ந்தது; களைப்புப் பறந்துவிட்டது.

நான்காம்நாள் பெத்லகேம் போய்ச்சேர்ந்தோம். தெருவெல்லாம் ஒரே சனக்கூட்டம். நான் இதற்கு முன்னால் ஒரே இடத்தில் இத்தனை மக்களைக் கண்டதேயில்லை.

தங்குவதற்கு இடம்தேட வேண்டுமே; அந்த வேட்டை தொடங்கியது. ஒவ்வொரு சத்திரம் சத்திரமாகச் சென்றோம். என் எஜமானர் எல்லாரிடமும் இடமிருக்குமா என்று கேட்டார். எல்லாச் சத்திரக்காரருமே எதிர்மாறாகத்தான் தலையை அசைத்தார்கள். ஏன்?

அந்நகரிலிருந்த கடைசிச் சத்திரத்துக்கு வந்தபோது, அந்தச் சத்திரச் சொந்தக்காரரும் இடமில்லையென்று கையை விரித்துவிட்டார். ஆனால், ஒரு விஷயம் சொன்னார். அதாவது தன் சத்திரத்துக்குப் பின்னால் ஒரு மாடடையும் தொழுவமிருப்பதாகவும் இஷ்டமென்றால் அங்கே நாங்கள் தங்குவதில் அவருக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றார். மேலும், அங்கு வைக்கோல் இருப்பதாகவும், நல்ல வெதுவெதுப்பாக இருக்கும் என்றும் கூறினார். என் எசமானர் அவருக்கு நன்றி கூறினார்.

நாங்கள் தொழுவத்துக்குள் நுழைந்தோம். அங்கே ஒரு பசு இருந்தது. நான் அதனோடு நண்பனாகினேன். இருவருமே கொஞ்ச நேரம் கதைகள் பேசிவிட்டு நித்திரையானோம்.

திடீரென்று நாங்கள் கண் விழிக்க வேண்டியதாயிற்று. சரியாகப் பன்னிரண்டுமணி.

ஆமாம், ஒரு பச்சிளம் பாலகனின் பவ்வியமான மெல்லிய அழுகைதான் எங்களை எழுப்பியது. சுற்றும் முற்றும் பார்த்தேன் —

புதிதாய் மலர்ந்த பூப்போன்ற ஒரு பச்சிளம் பாலகன், கந்தைத் துணியால் சுற்றப்பட்டு, முன்னணையில் கிடத்தப்பட்டிருந்தது.

அப்பாடா! என்ன குளிர். என்னுடலே சில்லிட்டது என்றால் ......அந்தப் பாலகனுக்கு. ஆமாம் குளிரடிக்கக் கூடாதுஎன்று பசுவும், நானும் பாலகனின் பக்கத்தில் பாய்ப் படுத்துக்கொண்டோம். நான் முதலில் பக்கத்தில் போய் நின்றுகொண்டுதான் இருந்தேன். என் காதில் ஒரு குரல் கேட்டது. அது என்னை முழந்தாளிடச் சொன்னது. வேறு யாருமல்ல, என் நண்பர் பசுதான் அப்படிச் சொல்லியுள்ளது. பிறகுதான் நானும் மண்டியிட்டுப் படுத்துக்கொண்டேன்.

அந்த இடத்தில் அமைதியும், சமாதானமும் நிலவியது. மேரியும், சூசையும் மிகமிக மகிழ்ச்சியாய் இருந்தனர். என் மனதிலும் ஒரு பூரிப்புத்தான்.

குழந்தை குளிரால் நடுங்குவதை உணர்ந்தேன். எனவே, நான் உஷ்ண மூச்சுவிட்டேன். நண்பன் பசுவையும் கேட்டுக்கொண்டேன். அதுவும் அப்படியே செய்தது. அந்நேரம்—

ஜோதிப் பிரகாசமான தேவதூதர்கள்போல் சிலர் தோன்றி அழகான—கானமழை பொழிந்தார்கள். நிச்சயம் என்னுடைய குரலைப்போல் இருக்கவில்லை. பிள்ளையைத் தாலாட்டினார்களோ என்னவோ ?

சற்று நேரத்தின்பின் சிலர் அந்த இடத்துக்கு வந்தார்கள். அவர்கள் செம்மறியாட்டுக் குட்டிகளைச் சுமந்துகொண்டு வந்ததால் அவர்கள் இடையர்கள் என்று புரிந்துகொண்டேன். அவர்கள் செம்மறிகளைக் கீழே விட்டுவிட்டு முழந்தாளிட்டார்கள்—பாலனை வணங்கினார்கள்.

அவர்கள் இப்படிப் பேசிக்கொள்வது கேட்டது. "இவர் அவர்தாம். தேவதூதர்கள் குறிப்பிட்ட அதே நபர்தான் இவர்."

ஓ... அப்படியென்றால், இவர் ஒரு விசேஷ குழந்தை என்று அறிந்துகொண்டேன்.

அடுத்த இரண்டொரு வாரங்களில் பலவிதமான மக்கள் இந்தக் குழந்தையைக் காணவந்தார் அவர்களில் மூன்றுபேர் மிகவும் அழகாக உடுத்தியிருந்தார்கள். மேரியும் சூசையப்பரும் இவர்கள் ஞானிகள் என்று சொல்லியது கேட்டது. மேலும் அவர்கள் நல்ல சிறந்த பரிசுகள் கொண்டு வந்தனர்.

ஓர் இரவு திடீரென்று சூசையப்பர் என்னை எழுப்பினார். அவர் சற்றே பயந்தும், கலக்கமடைந்தும் போயிருந்தார். ஆமாம், அவர் மேரியிடம்... "நான் ஒரு கனவு கண்டேன்; ஒரு தேவதூதர் வந்தார்; குழந்தைக்கு ஆபத்து: உடனடியாகப் பெத்லகேமிலிருந்து புறப்பட்டுப்போகும்படி கேட்டுக்கொண்டார்" என்றார்.

கொண்டுவந்திருந்த சாமான்கள் எல்லாவற்றையும் மூட்டை கட்டிக் கொண்டார்கள். ஓ...... என்னுடைய முதுகில் மேரியம்மாளும், அந்தச் சின்னப் பாலகனும் இருந்தார்கள். சூசை முன்னால் நடந்து இட்டுச்செல்ல இருளுக்குள் நடந்தேன்.

எகிப்துக்குப் போகத் தீர்மானித்தார் சூசையப்பர். வழியில் நிறைய அகதிகளைச் சந்தித்தோம். ஆயோ, அவர்கள் ஏரோது அரசனைப்பற்றிக் கொடிய பல விடயங்கள் சொன்னார்கள். அவன் இரக்கமெதுவுமின்றி இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொன்றதுபற்றிக் கதை கதையாய்ச் சொன்னார்கள்.

எகிப்தில் மூன்று வருடங்கள் மட்டில் இருந்தோம். பின்னால் எனது எஜமானி சொந்த ஊருக்குப் போகவேண்டும் என்றார்கள். எனவே,

சூசையும்—மேரியும்—அவர்களின் சின்னக் குழந்தத யேசுவும்—நானும் நசரேத்துக்குத் திரும்பி வந்து சந்தோஷமாக வாழ்ந்தோம்.

ஏ. பி. வி கோமஸ்

# "விண்மீன்" தெரியவில்லை?

உன் வருகைக்கு
ஆயத்தம் செய்யவே
எங்கள் தேசத்தில்
நாசங்கள் விளைந்தன!

உன் பிறப்புக்கு
குடிலொன்று அமைக்கவே
எங்கள் கோபுர நூலகம்
கொழுத்தப்பட்டது!

எந்த வர்க்கத்திற்கு
மீட்பளிக்க
மீண்டும் மண்ணில்
நீ உருவாகிறாய்?

எத்தனையோ மரியாள்களின்
வயிறுகள் எரிகின்றன
எந்த வயிற்றில்
நீ கருவாகிறாய்?

உறிஞ்சப்பட்டதால் சக்தியிழந்த
சமுதாயப் 'பெத்தலகேம்'
இருக்கிறது;
பிறக்கலாம் இனி நீ!

மனக்குவியல் மலர்களல்ல
பிணக்குவியல் மணக்கிறது
பிறக்கலாம் இனி நீ!

செய்தி முழக்கிய
இடையருக்காக
இலக்கிய இதயங்கள்
இருக்கிறோம் இங்கே!

நிச்சயமாய்த் தெரியும்
நீ இங்கேதான் பிறப்பாய்
உன் வருகைக்கு ஆயத்தம்
செய்யப்பட்டாயிற்று!

வரவேற்புப் பாபாட
வழிநெடுகும் பழிமுடித்த
வா(க)ன தூதர் நிற்கின்றார்
வரலாம் இனி நீ!

வானத்தைப் பார்க்கிறோம்
'விண்மீன்' தெரியவில்லை;
எப்படித் தெரியும்?
'ஏரோதுமன்னன்'
இங்கேயே இருக்கின்றான்!

தாயே 'மாதாவே'!
தந்தையே 'சூசையே'!
மாடிவீட்டு வர்க்கத்தின்
கோடியில் உங்களுக்கு
இப்போதும் இடங்கிடையாது;
இருபது நூற்றாண்டுகள் கடந்தும்!

''தற்செயலாய் வெடிக்கின்ற
துப்பாக்கிகள்''
'குடில்' தேடும் தெருக்களில்
உங்களையும் குறிபார்க்கலாம்
ஏனெனில்,
'ஏரோது மன்னன்'
இங்கேயே வாழ்கின்றான்.

உன்னை அழிக்கவே
எங்கள் குடில்கள் எரிக்கப்படுகின்றன.
எங்கள் செல்வங்கள் அழிக்கப்படுகின்றன.
அதற்காக நீ 'எகிப்துக்கு' ஓடவேண்டாம்
எதிர்பார்த்து நாங்கள் இருக்கிறோம்
எதிர்ப்பதற்கு நாங்கள் இருக்கிறோம்
பிறக்கலாம் இனி நீ!

— முருங்கன் சம. கண்ணன்

# இந்த முரண்பாடுகள் இன்னும் ஏனோ?

— பொன். பூலோகசிங்கம் —

மனிதனை இறைவன் படைத்தான். மனிதனே சமுதாயத்தைப் படைத்தான். உயர்ந்தோர் என்றும் தாழ்ந்தோர் என்றும் ஏழை என்றும் பணக்காரன் என்றும், தொழிலாளி என்றும், முதலாளி என்றும் எல்லைக் கோடு போட்டு சாதி, சமயம், பணம், வர்க்கம் என்ற அடிப்படையில் பிரித்து வகுத்து வரம்பமைத்து சுயநலவாதிகளும் சுய இச்சைகளும் ஜமீன்தார்களும் ஜம்பவான்களும் மிட்டாதாரும் மிராசுதாரும் அமைத்துக் கொண்டனர். இந்தப் பிற்போக்குவாத கும்பலைச் சாடவும் இக்கும்பலின் ஈனச் செயல்களைச் சிதைக்கவும் அன்று சோக்கிரடீஸ் தொடக்கம் இன்றுவரை எத்தனையோ சீர்திருத்தவாதிகளும் சிந்தனையாளர்களும் முயன்றனர். முயன்று வருகின்றனர். ஆனல் இந்த முடை நாற்றம் அகன்றதா? முரண்பாடுகள் நீங்கினவா முட்டாள்தனத்தின் முட்டறுக்கப்பட்டதா? மூட நம்பிக்கையின் முகமூடி கிழிக்கப்பட்டு அதன் முதுகெலும்பு முறிக்கப்பட்டதா? இவை யாவும் இன்று கேள்விக் குறியாகவே இருந்து வருகின்றது.

முதுகொடியப் பாடுபட்டு முதுகெலும்பு முறிய மூட்டை தூக்கும் தொழிலாளியின் முதுகில் ஏறிச் சவாரிவிடும் முதலாளி, ஆட்டிப்படைக்கும் அந்தக் கும்பலுக்கு ஆலவட்டம் பிடித்து அடி வருட ஒரு கூட்டம். அடி வருடும் அந்தக் கும்பல் ஆட்சிப் பீடங்களில் ஏறி அமர்ந்திட மேற்கொள்ளும் அமர்க்களம். அக்களத்திற்கு பீடிகை போட ஏற்றதாக தேர்தல் களம். எத்தனை தேர்தல் களம் வந்தாலும் சாதாரண மனிதன் வாழ்வோ என்றுமே போர்க்களம்தான். இந்த முரண்பாடுகள் என்று நீங்குமோ?

ஆடைக்கு மேல் ஆடை அணிந்து புழுக்கத்தில் புழுங்கி அவிந்து அழுகின்ற குழந்தையின் நிலை ஒரு புறத்தில் காட்சியாக விருக்கின்ற நிலை. இன்னொரு புறத்தில் மானம் காக்கக்கூட அணிந்துகொள்ள ஆடையின்மையால் கையது கொண்டு மெய்யது பொத்திகாலது கொண்டு மேலது தழீயவண்ணம் குளிரினில் நடுங் கும்பச்சைக் குழந்தையின் பரிதாபகரமான நிலை. ஏன் இந்த முரண்பாடு? ஏழைக்கு மட்டு மேன் பெரும்பாடு?

தன் அழகு கெட்டுவிடும் என்ற போலி மயக்கத்தில் மூழ்கி குழந்தைபெற்றமையால் சுரக்கும் பாலைக்கூட பிள்ளைக்குக் கொடுக்காது, தாய்ப்பாலிலே இருக்கும் தாயக உணர்வையும் தாய் மொழிப் பற்றையும்கூட பிள்ளைக்கு ஊட்டாது புட்டிப்பாலை ஆயா மூலம் கொடுத்து உணர்வற்ற சதைப் பிண்டங்களாக பிள்ளைகளை வளர்க்கும் அழகு ராணிகளும் அளவுக்கு மீறிய உணவை உண்டமையால் அஜீரணத்தால் வாடும் குழந்தைகளும் ஒரு புறம்; உணவின்மையால் வாடி வதங்கி போஷாக்கின்மையால் உடல் பொருமி பெற்ற பிள்ளைக்கு பாலூட்ட வழியின்றி வாடும் தாயும், தாயிடம் பால் இன்மையால் பசித்த வயிற்ருேடு தாயிடம் முலை வருடும் மழலைச் செல்வங்களும் மறுபுறம் ஏன்இந்த முரண்பாடு?

அரசியல் முரண்பாடுகள், பொருளாதார முரண்பாடுகள் மட்டுமா – சமுதாய முரண்பாடுகளுக்கும் குறைவேயில்லை, சீதனப் பேயையும் டொனேஷன் பூதத்தையும் ஆரத் தழுவி அன்பு பாராட்டும் பணப் பிசாசுகள் மலிந்த பூமியில் விலாசமில்லாத காரணத்தால் அழகுப் பெண்கள் கல்யாணச் சந்தையில் விலைப்படாமல் இருக்கும் விடிவற்ற நிலை ஒரு இடத்தில்; விலாசக் காரராக இருப்பதால் தவருன விலாசத்தில் விலை போகும் அசிங்கப் பொம்மைகள்(Wrong Numbers) இன்னொரு இடத்தில். இந்த முரண்பாடுகள் ஏன்?

சாதித் திமிராலும் அதன் வழி பிறந்த அகம்பாவத்தாலும் ஆண்டவனைக் கூட ஆலயம் என்னும் சிறையினுள் பூட்டி வைத்திருக்கும் வெறியர்கள் தாகத்திற்கு தண்ணீர் அள்ளித்தானும் குடிக்கக்கூடாது என்ற அகந்தையினுல் வேலி அடைப்புக்குள் கிணறுகளைக்கூடச் சிறை வைத்திருக்கும் சீர்கெட்ட நிலை ஒரு புறம்; இன்னும் இதே மனிதர் மரத்தோடு வெட்டிச் சாய்த்து மனிதனையே வீழ்த்திக் கொல்கிருர்கள். இவை யாவும் போதாதென்று இதே மனிதர் ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் பத்தாம் திகதி மனித உரிமைகள் தினம் என்று கொண்டாடும் வேடிக்கை விநோத நிகழ்ச்சியும் இங்கேதான் இடம்பெறுகிறது. இத்தனை முரண்பாடும் இன்னும் ஏனோ?

# மீட்பு என்றே?

— நாவண்ணன் —

## காட்சி 1

(யூதக்குடிமகன் ஒருவன் ஓடிக்கொண்டிருப்பதுபோலவும் ரோமைப்போர் வீரன் ஒருவன் துரத்திக்கொண்டு சென்று ஈட்டியால் குத்திக் கொல்வது போன்றும் அபிநயத் துடிப்பு — அல்லது நிழல் காட்சி)

(ஒரு தாய் அழுதுகொண்டு வருகிருள். கணவன் மனைவி கைக்குழந்தையுடன் ஒரு இடைக் குடும்பம் வருகிறது.)

தாய் ஐயோ.... மகனே.... என்மகனே....

இடையன் A அம்மா.... ஏனம்மா அழுகிறீர்கள்.

தாய் மகனே.... நீ யாரப்பா.... இந்த ஊரில் உள்ளவர்கள் எல்லாருக்கும் என்னைத் தெரியுமே. என் அழுகையின் காரணம் புரியுமே....

இடையன் A எனக்கு ஒன்றும் தெரியாதம்மா.... குடிசனமதிப்பின் பொருட்டு எல்லோரும் சொந்த ஊர்களுக்கு திரும்பவேண்டும் என்ற அரசனின் கட்டளையின் பேரில் என் சொந்த நாடாகிய இங்கு திரும்பிக்கொண்டிக்கிறேன்.

தாய் என்னப்பா நீயும் யூதனு!

இடையன் A ஆமாம்.

தாய் நானும் யூதப் பெண்தான். இந்த உரோமையர் ஆட்சியிலே சொந்தமென்று சொல்லிக்கொள்ள யூதருக்கு ஒரு நாடு உண்டா? உலகெலாம் பரந்து வாழும் இந்த யூத இனத்துக்கு உரிமையோடு சொல்லிக்கொள்ள பூமி உண்டா....

இடையன் A அது கிடக்கட்டும் தாயே நீங்கள் ஏன் அழுகின்றீர்கள்.

தாய் ஐயோ.... எனக்கு உள்ளது ஒரே ஒரு மகன்.. நான் கணவன் இல்லாத விதவை.. என் மகனை.. ஆடு மேய்க்கச் சென்ற அவனை.. இந்த உரோமை நாட்டு வீரர்கள் கொன்றுவிட்டார்கள்.... அநியாயமாகக் கொன்றுவிட்டார்கள்.

இடையன் A ஏன்?

தாய் உரோமையர் ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்யும் புரட்சிக்காரர்களின் ஒருவன் என்ற சந்தேகத்தின்பேரில்:

இடைச்சி யூதர்கள் தமது சொந்த நாட்டிலேயே நடமாடமுடியாத நிலைமையா இங்கு நிலவுகின்றது.

தாய் ஆம் மகளே.... நீயும் உன் கணவனும் கவனம் ஊருக்குப் புதியவனுக இருக்கிருய். இப்பொழுது வெளியூர்களில் இருந்து வந்துகொண்டிருக்கும் யூதர்கள் கடுமையாகக் கண்காணிக்கப்படுகிருர்கள்.

இடையன் A ஆமாம் நகர வாயிலில் கடுமையாகச் சோதனை செய்த பின்னரே உள்ளே அனுமதித்தார்கள்.

தாய் சோதனை செய்யும் சாட்டில் மக்களிடமிருந்து கொள்ளையும் அடிக்கிருர்களாமே....

இடையன் A நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன். ஆனால் என்னிடம் ஏதும் இருந்தால்தானே அவர்கள் கொள்ளையடிப்பதற்கு.

தாய் அதுசரி மகனே கைக்குழந்தையுடன் நீ எங்கே தங்கப்போகிறாய்.

இடையன் A அதுதான் இன்னும் தெரியவில்லை. நீண்ட காலத்துக்கு முதலே எனது மூதாதையர் கலிலேயாவில் குடியேறிவிட்டதால் எங்களுக்கு இங்கு எங்கு தங்குவதென்றே தெரியவில்லை. சத்திரங்களில்கூட வெளியூர்களில் இருந்துவந்தவர்களால் கூட்டம் நிறைந்து வழிகின்றது.

தாய் மகனே நீங்கள் இங்கே எங்கேயும் தங்க இடம் எடுக்கமாட்டீர்கள். வாருங்கள் என் வீட்டுக்குப் போவோம். நீங்கள் அங்கே தங்கலாம். நீயும் ஊருக்குப் புதியவன் பார்ப்பதற்கும் ஒருமாதிரி இருக்கிறாய். உண்மையான குற்றவாளிகளைப் பிடிக்கத்தெரியாத எமது வீரர்கள் உன்னைப் பிடித்து அடைத்தாலும் அடைத்து விடுவார்கள்.

இடையன் A சரியம்மா.... வாருங்கள் போவோம்.

## காட்சி 2

(ஆயர்கள் ஆடு மேய்த்துவிட்டு குளிர் நடுக்கத்துடன் ஒரு இடத்தில் வந்து அமர்கின்றனர்.)

இடையன் A அப்பப்பா.... இங்கு எல்லாம் கொடுமையாக இருக்கிறது....

இடையன் B நீ எதைச் சொல்லுகிறாய்.... குளிரைத்தானே.

இடையன் A ஆமாம்.... இயற்கையும் அப்படித்தான் இங்கு இருப்பவர்களும் அப்படித்தான்.

இடையன் C அண்ணே, இங்க அசட்டுப் பிசட்டு எண்டு பேசக்கூடாது. மரங்களுக்கும் காது இருக்கும்.

இடையன் A உங்களைப்போல பயந்தவங்களாலதானே இன்றைக்கு யூத மக்களுக்கு இந்த நிலை.

இடையன் B தம்பி பேசுற மாதிரியைப் பார்த்தால் கனகாலத்துக்கு வெளியால இருக்கமாட்டீர்போல இருக்கு.. தம்பி

இடையன் A ஏன்?

இடையன் C உரோமை வீரர்களின் குணம் உனக்குத் தெரியாது அவங்களோடு கொஞ்சம் முண்டினால் போதும் பிறகு நீ வீட்டபோய் சாப்பிடமாட்டாய்.

இடையன் A பெரிய அரசியல் ஞானி, ஆட்சித்திறன் மிக்கவர் என்றெல்லாம் போற்றப்படுகின்ற அகஸ்துஸ் சீசருக்கு இது எல்லாம் தெரியாதா?

இடையன் B அவனும் மேருமையன் தானே.... குரங்கெல்லாம் ஒரு முகம்போல.... எல்லாருக்கும் ஒரே குணம்.

இடையன் A இல்லே தெரியாமல்தான் கேட்கிறன் எதுக்காக இத்தனை கெடுபிடிகள் எல்லாம்.

இடையன் B தம்பி நீ விபரம் தெரியாத பிள்ளை.... இந்த இஸ்ராயேல் இனம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற மீட்பர் மெசியா வரும் காலம் இதுதான் என்று எல்லோரும் நம்பிறுங்க. ஒருவேளை வந்திட்டாரோ என்று வேற அச்சமும் இருக்கு அதால இந்த இஸ்ராயேல் பரம்பரையை மெசியா புரட்சிக்குத் தூண்டி ரோமை ஆட்சியைக் கைப்பற்றிவிடுவார்களோ என்ற அச்சம் வேற இருக்கு. அதால போறவன் வாறவனை எல்லாம் இவன்தான் மெசியா, இவன்தான் மெசியா என்று நினைச்சுக் கைது செய்யிறுங்க.

**இடையன் C** அண்ணே பாம்பு ஏன் படமெடுக்குது பயத்தால. அதுபோல எங்கட படை வீரர்கள் ஏன் இப்படி நடக்கிறுங்க தெரியுமா புரட்சிக்காறர்கள் தங்களைக் கொன்றிடுவாங்களே என்ற பயத்திலதான்.

**இடையன் B** அவங்க ஆட்களைச் சோதனை இடுறபோது பார்க்கவேணுமே திமிர்வாதக்காரனைச் சோதிக்கிறது என்றுலும் நாலுபேர் சுத்திவர ஈட்டிய நீட்டிக்கொண்டு நிற்க ஐந்தாம் ஆள் சோதிப்பான்....

**இடையன் A** அப்படித்தான் நகருக்க வாறபோது என்னையும் என் மனைவியையும் சோதிச்சாங்க....

**இடையன் C** நல்லகாலம் உன் கைக்குழந்தையையும் சோதிக்காம விட்டாங்களே....

**இடையன் B** இனி அதையும் செய்வாங்க.... பிறந்திருக்கிறது மெசியாவா என்று சோதிக்க....

**இடையன் A** இந்த ஏரோதன் யூதன்தானே அவனுக்குக்கூட இந்த அடிமை உணர்வு வர இல்லையே......

**இடையன் C** அவன் கிடக்கிறுன் குடிகாரப் பயல். அவனுக்கு மதுவும், மங்கையும் என்றுல் போதும் மக்களைப் பற்றிக் கவலையில்லை.

**இடையன் A** இவனைப் போன்ற இன உணர்வில்லாத தலைவர்களாலதானே நமக்கு இந்த நிலைமை.

**இடையன் B** தம்பி அவன் சுத்தமான யூதனுக இருந்தால்தானே அவனுக்கு இன உணர்வு வரும். அவனுடைய பரம்பரையில கிரேக்க இரத்தமும் கலந்திருக்கு.... இப்பிடிப்பட்ட கலப்புச் சாதிகளிட்ட ஒரு யூதன் விடுதலை உணர்வை எதிர்பார்க்க முடியுமோ.

**இடையன் A** இருக்கட்டும் இருக்கட்டும் எல்லாத்துக்கும் காலம் வரும். மெசியா விரைவில் வரத்தான் போகிறுர்.

**இடையன் B** அது கெதியில் நடக்கும். இந்த இனத்தின் துன்பத்தையெல்லாம் வாக்குப்பண்ணப்பட்ட மீட்பர் தீர்த்துவைப்பார்.

**இடையன் C** அந்த நல்ல நாள் எதுவோ.... அந்த நல்ல சேதியைக் கேட்கும் நாள் எதுவோ....
(இப்பொழுது விண்ணவர் கீதமும் வானவன் செய்தி கூறுவதும்)

**இடையன் C** (பயந்து) யாரிது............ நாங்க பேசிக்கொண்டிருந்தது ரோமை நாட்டு வீரருக்குக் கேட்டு விட்டதோ...... அவங்கதான் மாறு வேஷத்தில்..... வந்து நிற்கிறார்களோ?

**வானதூதன்** அஞ்சாதீர்கள்.. இதோ மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் செய்தியை அறிவிக்கிறேன். தாவீதின் ஊரிலே உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவராகிய மெசியா....

**இடையன் A** நாட்டில் ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. மீட்பர் மெசியாவை நாம் அடையாளம் கண்டு எப்படி?

**வானதூதன்** பிள்ளையைத் துணியில் சுற்றி முன்னணியிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்.

(மீண்டும் வானவர் கீதம் தூதன் மறைதல்)

**இடையன் A** மீட்பர் மெசியா பிறந்துவிட்டார் மீட்பின் காலம் வந்துவிட்டது வாருங்கள் போவோம்.

**இடையன் B** இந்த நற்செய்தியை எம்மவர்களுக்குச் சொல்வோம்.

**இடையன் C** தாமதமேன். வாருங்கள் சென்று அவரை வணங்குவோம்

## காட்சி 3

(பாடல் நடைபெறும் வேளையில் ஏரோதன் வருதல்)

**( பாடல் )**

1. அந்நாளில் யூதேயாவை
ஆண்ட மன்னன் ஏரோதன்
வந்த அரசர் மூலம் மீட்பர்
வந்த சேதி அறிந்துகொண்டான்.

2. ஆண்டுவந்த அந்தமன்னன்
அவதரித்த சேயைக் கொல்ல
கொண்டு எண்ணம் மனதினிலே
மீண்டுவருக என வுரைத்தான்.

ஏரோதன்: மூன்று அரசர்களும் திரும்பி வருவார்கள் செய்தி தருவார்கள் — யூதரை ஆள இன்னுமொரு தலைவனா? வரட்டும் செய்தி தரட்டும் — வாளை ஏந்தும் என்கரம் தரையில் உருளும் அவன் சிரம்.

**( பாடல் )**

3. இந்தவாறு எண்ணியந்த
ஏரோதன் காத்து நிற்க
அந்தமூவர் என்ன செய்தார்
ஆண்டவரின் ஆணை பெற்றார்.

4. வந்தவழி வந்திடாது
வேறுவழி மார்க்கமாக
சொந்த நாடு ஏகிவிட்டார்
சேதியிதை இவனறிந்தான்.

ஏரோதன்: ஏரோதனை ஏமாற்றிவிட்டார்கள். வேறு வழியால் சென்றுவிட்டார்கள். ஏரோதன் ஏமாறமாட்டான் — பிறந்தவன் குழந்தை ஆண் குழந்தை. இந்த யூதேயாவிலேயே ஆண்குழந்தைகள் இல்லாது செய்துவிட்டால்? அதுதான் சரி. இரண்டுவயதுக்கு உட்பட்ட ஆண் குழந்தைகள் இந்த யூதேயாவிலேயே இருக்கக்கூடாது. படைகள் திரளட்டும் — தலைகள் உருளட்டும்.
(அழுகுரல் கேட்கின்றன. — நிழலில் கொலைசெய்யப்படும் காட்சியைக் காட்டலாம்.)

## காட்சி 4

(இடைச்சி அழுதுகொண்டிருக்க இடையன் வருகிறான்.)

**இடையன் A** எலிசா.... இன்னும் பிள்ளையைப் பறிகொடுத்த வேதனை உனக்குப் போகவில்லையா.

**இடைச்சி** சைமன் எங்கள் பிள்ளை — எங்கள் மூத்த மகன் — ஒரே மகன் பிறந்து ஐந்து மாதங்கள்கூட ஆகவில்லையே அவன் ஏரோதன், கொலைகாரன் அநியாயமாகக் கொன்றுவிட்டானே....

**இடையன் A** உண்மையான மெசியாவை, கிறிஸ்துவை கண்டுபிடிக்க திறமையற்றவர்கள், திராணியற்றவர்கள். ஏதுமே அறியாத அப்பாவி ஆண் பிள்ளைகளைகளையல்லவா கொலை செய்கிறார்கள்.

**இடைச்சி** இவனுகளுக்கெல்லாம் எதற்கு ஆட்சி, எதற்கு நாடு. சைமன் இப்பொழுது நான் கவலைப்படவில்லை. எனது மகன் இறந்ததையிட்டுக் கவலையில்லை.

**இடையன் A** எலிசா உனக்கு......?

**இடைச்சி** சித்தப்பிரமை பிடித்துவிட்டது என்று நினைக்காதீர்கள். உண்மையாகத்தான் சொல்லுகிறேன். எனது மகன் யாருக்காக மாண்டான் மெசியாவுக்காக, மீட்பர் கிறிஸ்துவுக்காக...... எமக்கு விடுதலையைப் பெற்றுத் தரப்போகும் அந்த வீரனுக்காக.... அவருக்காக உயிரைக் கொடுத்த என் மகன் அவர் நடத்தப்போகும் விடுதலைப் போரால் எனது மகனும் பங்குகொண்டு விட்டான்..... விடுதலைப் போரில் பங்குகொண்டு இறந்த அவன் வீரமகன் — அந்த வீரனைப் பெற்ற நான் வீரத்தாய்.... வீரத்தாய்.... வாழ்க விடுதலை வீரன் கிறிஸ்து.... வளர்க விடுதலைப்போர்....

**திரை**

## "உங்களைத்தான் கேட்கிறோம்" -விடைகள்

குறிஞ்சி சிறப்புமலர்:— (பங்குனி, சித்திரை — 1981)
ஊனமுற்றோர் சிறப்புமலர்:— (ஆடி, ஆவணி — 1981)
மொத்தம் இரண்டு சிறப்பு மலர்கள்

### பரிசு பெறும் அதிஷ்டசாலி:


ஷாமினி சுவாம்பிள்ளை
இல. 33, 3–ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

### சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுபவர்கள்:

அ. றஞ்சிற் பிள்ளைநாயகம் — யாழ்ப்பாணம்;
எம். ஏ. முஹம்மது அஜீவாஹித் — கொழும்பு 12;
வ. சாலினி — தெல்லிப்பளை
P. இரஜேந்திரா வவுனியா;
R. S. செல்வரட்ணம் — அல்வாய்;
ஞா. அல்பேட் — திருகோணமலை;
விக்ரர் குமார் — ஊர்காவற்றுறை;
பற்றிமாமலர் — நாவற்குளம்
திருமதி. தி. ஞானப்பிரகாசம் — மன்னார்;
அ. நிமோஜன் — யாழ்ப்பாணம்;
திருமதி. எம். ஏ. அந்தோனிமுத்து — ஏழாலை;
A. ஜஸ்ரின் ஜெயராஜ் — ஏழாலை;
திரேசாவசந்தா — சுன்னாகம்;
P. பெனடிற் — பள்ளிமுனை;
புறூனோ ஜோசவ் — மல்லாகம்;
மாகிறேற் பாக்கியநாதர் — இளவாலை;
சகோதரி. லோறு — யாழ்ப்பாணம்.

ஜெலி. க. நடா.

# 'பாரதி' குறுக்கெழுத்துப் போட்டி



உலகளாவிய ரீதியில் விடுதலைக்கவிஞன் பாரதியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்றது. அதையொட்டி புரட்சிக் கவிஞன் தன் பாடல்களில் கையாண்ட சொற்களைக் கொண்டு 'புதிய உலகம்' குறுக்கெழுத்துப் போட்டியினை அமைத்திருக்கின்றது. புத்துணர்வுடன் பங்கு கொண்டு விடைகளைத் தைத்திங்கள் பத்தாம் நாளுக்கு முன் தெளிவாக எழுதி, அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

## இடமிருந்து வலம் (→)

1. பாரதத்தாயாக பாரதி கற்பனை பண்ணிய பாத்திரம்.
5. இவையிரண்டும் மாறிக் கிடந்தாலும் விற்றுச்சித்திரம் வாங்கமுடியுமா? என்று கேட்கின்றான் பாரதி
6. பெண்கள் ஆண்களுக்கு இப்படி இருக்கக்கூடாது என்பது பாரதியின் கர்ச்சனை.
8. இது இல்லையென்றால் பாரதி இல்லை.
10. நடிப்புச்சுதேசிகள் தேவிக்குரிய இவ்விடத்தில் பிறர் தீமைகள் செய்தாலும் பேசாதிருப்பார்கள்.
15. எங்கள் ——— என்று தோள் கொட்டுகிறான் பாரதி.
16. சொந்த நாட்டில் இந்த மூன்றெழுத்து இடத்தைப் பெருக்குவது கடமையென்றான் பாரதி.
17. இதைச் செய்பவர்களைக் கண்டால் மோதி மிதித்துவிடு என்பது பாரதியின் அறைகூவல்.
18. சிந்து நதியின் மீது இவனுடைய நாட்டு இளம் பெண்களோடுதான் தோணியோட்ட விரும்பினான் பாரதி.

## மேலிருந்து கீழ் (↓)

1. பறங்கியரிடமிருந்து மட்டுமல்ல இந்தச் சாதியினரிடமிருந்தும் விடுதலை வேண்டுமென்பது பாரதியின் இலட்சியம்
2. பாரதியின் சமத்துவப் போதனையில் இந்த நிறமொரு பூனை.
3. மாறிக்கிடக்கும் இதுகளுக்கு இன்பமுண்டோ என்று கேட்கிறான் பாரதி.
4. பாரத தாயின் மணியான இதை வணங்கிட அழைக்கின்றான் பாரதி.
5. பாரதியின் இது ஓட்டும் கனவை வ. உ. சி. நனவாக்கினார்.
7. காவிரி வெற்றிலைக்கு பண்டமாற்று இது என்றான் பாரதி.
9. குழம்பிக் கிடக்கும் இந்த மண்டலத்துக்கு வெள்ளையருக்கு முன்னமே பாரத மக்கள் போகவேண்டுமென்று பாடினான் பாரதி.
11. இலக்கம்(5) இல் மேலிருந்து வ. உ. சி. கீழ்வாங்கியது இந்த நோக்கத்திலே தானே ஆனால் கொஞ்சம் மாறிவிட்டது.
12. இந்த ஜென்மம் எடுப்பதற்கு மாதவம் செய்ய வேண்டுமென்றான் பாரதி.
13. இல 15 இல் இடமிருந்து வலம் செல்வது இங்கே பாரதிக்கு இதுவாகும்.
14. ஆண் கடவுளாகிய இவனை பெண்ணாக்கியும் காதலித்தான் பாரதி.
15. இவர்களைப் பாரதி ஓடிவிளையாடு, ஓய்ந்திருக்காதே என்றான்.
18. பாரதி – குடுகுடுப்பைக்காரனாக மாறி இது சொன்னான்.

# எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும்

— மலர்வேந்தன்.

திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டுச் சுழற்சியில் மீண்டும் ஆரம்பத்தைத் தொடக்கி உள்ளோம். திருவருகைக் காலத்தைத்தான் குறிப்பிடுகிறேன். இறைவனுடைய வருகையை எதிர்பார்த்து நம்மை ஆயத்தப் படுத்துங் காலம் திருவருகைக் காலம். திருச்சபை நடாத்தும் திருவழிபாட்டு ஒழுங்குகள் அனைத்துக்கும் ஒரு வரலாற்றுப் பின்னணி உண்டு. இது திருவருகைக் காலத்துக்கும் பொருந்தும்.

பழந்திருமுறையில் இஸ்ராயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட மெசியாவின் வருகையை எதிர் பார்த்து ஆயிரக்கணக்கான வருடங்களாகக் காத்திருந்தனர். தம்மை அடிமைத் தளையிலிருந்து விடுவித்து உரிமைக்குடிமக்களாக மாற்றுந்தலைவர்—அரசர் அவரே எனக் கருதினர். காலங்காலமாக கண்ணீர்விட்டுக்கதறி அவரை அழைத்தனர்.

ஆனால், மெசியா வந்தபோது அவர்கள் அவரைத் தெரிந்து கொள்ளவில்லை. புரிந்துகொள்ள வில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை. அதுமட்டுமல்ல அவரை உயிரோடு வாழவும் விடவில்லை. அவர்களின் எதிர்பார்ப்பும் இறைவனின் திட்டமும் முரண்பட்டன; வேருக இருந்தன. ஏனிந்த ஏமாற்றம்? ஏனிந்த முரண்பாடு? இங்கே எமதுசிந்தனைக்குப் பொருளுண்டு. இன்றைய எமது வாழ்வுக்குச் செய்தி உண்டு.

இறைவனுடைய வருகையை மீட்பைப்பற்றிய உண்மைகளை அவர்கள் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை. எத்தனையோ இறைவாக்கினர்கள் எடுத்துச்சொல்லியும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தமக்குத்தாமே சில எல்லைகளை, வட்டங்களை வகுத்துக்கொண்டு வாழ்ந்தனர். பொருளற்ற சம்பிரதாயங்களை— பாரம்பரியங்களை —சட்டங்களை—பழக்கவழக்கங்களை தம் சுயநலனுக்காகக் கட்டிக் காத்தனர். அவற்றிற்கே அடிமையாகினர். அன்பைவிட அவர்களுக்குச் சட்டங்கள் பெரிதாயிருந்தன. உள்ளத் தூய்மையைவிட உடற்றூய்மை அவர்களுக்கு உயர்வாயிருந்தது. ஆண்டவனை மதித்த அவர்களால் அயலவனை மதிக்க முடியவில்லை. காணிக்கைகள் கொடுத்த அவர்களால் கருணையைக் கொடுக்க முடியவில்லை.

மெசியா வந்தபோது அவரது எளிமை, உலகநோக்கு, அன்பு, மன்னிப்பு அனைத்துமே இவர்களுக்குக் கசந்தது. இவர்களது குறுகிய வட்டத்தை அவர் உடைக்க முனைந்தபோது அவ

ரையே உடைத்துவிட அவர்கள் முயன்றனர். எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களே இப்போது எதிர்த்தனர். எவ்வளவு முரண்பாடு!

இன்று நாமும் எதிர்பார்க்கின்றோம். நமது எதிர்பார்ப்பின் எல்லை எது? வரும் யேசுவிடம் உடன்பாடா? அல்லது முரண்பாடா? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். கிறிஸ்து பிறப்புவிழா என்றதும் நம்மையும் சில பாரம்பரியமான பழக்கவழக்கங்களே அடிமைப்படுத்தி வைத்திருக்கின்றன.

புத்தாடைதைத்தல், அலங்காரம் செய்தல், வாழ்த்து அனுப்புதல், விருந்துகள், சந்திப்புகள், நள்ளிரவுப்பூசை என்று பட்டியல் நீண்டு கொண்டே போகும். இது தான் நமது எதிர்பார்ப்பா? இதற்காகத்தான் கிறிஸ்து வந்தாரா? கிறிஸ்துவின் பிறப்பும் எதிர்பார்ப்பும் வெறும் விழாக்களாலும் சடங்குகளாலும் அர்த்தம் பெறுவதில்லை. இவற்றைவிட அது ஆழமானது.

மனிதனைப் புதுமனிதனாக மாற்றுவதே கிறிஸ்துவின் வருகையின் நோக்கம். ஆடையிலும், அலங்காரத்திலும் புதியதாவதல்ல. அகத்திலும் அகத்தின் விளைவான செயல்களிலும் புதியதாகவேண்டும். சுயநலம்பிடித்த நம்மைநாமே அழிக்குந்தீய பழக்கங்களிலிருந்து புதியதாகவேண்டும். சாதி, இன, மொழி வெறிகளைக் கட்டிக்காத்து மனித உறவை அழிக்கும் மடமைகளிருந்து நாம் மீட்படைய வேண்டும். பணம், பதவி, செல்வாக்கு, அந்தஸ்து என்ற பெருமைகளைத் தாங்கி எளியவரை அடிமைப்படுத்தும் இறுமாப்பிலிருந்து நாம் மீட்படைய வேண்டும். உழைப்பவனுக்கு தகுந்த ஊதியம் தர மறுக்கும் சுரண்டல் மனப்பான்மையிலிருந்து நாம் விடுதலைபெற வேண்டும்.

கிறுஸ்து வர விருக்கின்றார். நம்முடைய ஆயத்தமும் முழுமையானதாக இருக்கவேண்டும்.

இறைவா நீ மீண்டும் வர வேண்டும். எம்மை முழு அடிமைத்தனங்களிலிருந்தும் மீட்டு விடுதலை தரவேண்டும்.

---

ஸ்ரான்லி: எனக்கு நரகத்திற்குப் பேகத்தான் விருப்பம்.

அருள்: ஏன்? எல்லோருக்கும் மோட்சத்திற்குப் போகத் தானே விரும்பம்.

ஸ்ரான்லி: அவர்களுக்கு ஒன்றும் விளங்காது. மோட்சத்தில் ஏழைகவ்தயன் இருப்பார்கள். நரகத்தில்தான் பணக்காரர்கள், பெரிய ஆட்கள் எல்லாரும் இருப்பார்கள்.

— ஜெயக்குமார்

# கருத்து மோதல்



## நமது நாட்டில் இன்று சமயபாடம் கட்டாயபாடமாக இருத்தல் வேண்டும்

எமது நாட்டின் கல்வி கற்பித்தல் துறையில் கடந்த காலங்களிலெல்லாம் சமயக் கல்விக்கு ஓரளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்த போதிலும் கட்டாய பாடமாக்கப்படாமலிருப்பது ஒரு வருந்தத்தக்க குறையேயாகும். மாணவப் பருவத்திலேயே சமயக் கொள்கைகள், தத்துவங்கள் என்பன போதிக்கப் படும்போது அவை பசுமரத்தாணி போன்று அடிமனதிற் பதிந்து விடுகின்றன. இவற்றினின்றுதான் இறை நம்பிக்கை, புரிந்து கொள்ளும் இயல்பு, தியாகம், அன்பு போன்றவை மாணவர்களின் சிந்தனையில் வேரூன்றி விடுகின்றன. சமயபாடம் கட்டாய பாடமாகக் கற்பிக்கப் பட்டாற்தான் மேற்கூறப்பட்டவை


பரிசு பெறுபவர்

ப. இரகுபதி
14-ம் வட்டாரம்
கிழக்கு
நெடுந்தீவு


சாத்தியமாக வாய்ப்புண்டு. அண்மைக் காலங்களாக எம் நாட்டிற் பெருகிவரும் வன்செயல்களுக்குக் காரணம் என்ன? நான்கு பெரும் மதங்களைக் கொண்ட நாடாக இலங்கை இருந்தும் அவை கூறிய உண்மை நெறிகளை மக்கள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவில்லை. சமயபாடம் பாடசாலைகளில் கட்டாய பாடமின்றி ஏதோ ஒரு பாடம் என்ற ரீதியில் கற்பிக்கப்பட்டதனால் அதாவது உபகதைகள் போன்று

சுவைக்காக மாத்திரம் கற்பிக்கப் பட்டதனுல் அடிப்படை உண் மைகளே, தத்துவங்களேச் சரியா கப் புரிந்து கொள்ளாமல் மாண வர்கள் பாடசாலையை விட்டு வெளியேறுகின்றனர்.

மனிதன் மிருகமாக மாறிக் கொண்டு வரும் வேகத்தினை மதம் என்ற தடைதான் கூடிய ளவு தடுத்து நிறுத்துகிறது என் ருல் மிகையாகாது. மனிதப் பண் புகளேப் புனிதமாக்குபவை சமய நெறிகளே. நல்லுணர்ச்சிகளேத் தூண்டுகின்றன. மனச் சாட்சி

பாராட்டுப் பெறுபவர்கள்
எம். எச். எம். எ. சப்ரி
வரகாபொளே
எஸ். பற்றிக்
வட். இல. 1
வங்காலே

என்பதற்குப் பக்கபலமாக அமை பவை மத நம்பிக்கைகளே. கல் விச் சிந்தனையாளர்களது கருத் துப்படி கல்வியின் உயர் இலட் சியம் ஒழுக்கம். ஒழுக்கத்தைப் போதிக்கும் சமய பாடம் கட் டாய பாடமாக்கப் படாமலிருப் பது கல்விக் கொள்கையையே முரண்படுத்துகிறது.

சோவியத் யூனியன், சீன போன்ற நாடுகளில் பெரும் பாலான மக்கள் இறைவனே அறியாதிருக்கின்றனர். அங் குள்ள கெடுபிடியான சூழல் மக் களே அவ்வாறு ஆக்கியுள்ளது. மாருக எமது நாட்டில் சமய பாடத்தைக் கட்டாய பாடமாக் கினல் மதக் கோட்பாடுகளுக் கமைய மக்கள் வாழ்க்கையை வழிப்படுத்தலாம். புத்துணர்ச்சி பெற்ற சமுதாயம் ஒன்றை மலர வைக்கலாம். இதனுல் அநேகம் பேர் இறையியல் துறையிலும் ஈடுபட வாய்ப்பு ஏற்படும். மக்க ளிடையே தேவபயம், தேவநம் பிக்கை என்பன ஏற்பட்டு பாவச் செயல்களிலிருந்தும் விடுவிக்கப் பட்டவர்களாவார்கள்.

மேலேத் தேசங்களிலிருந்து கடந்த நூற்ருண்டுகளில் கீழைத் தேசங்கட்கு வந்தவர்கள் மதங்க ளேப் பரப்புவதில் தீவிரமாக ஈடு பட்டு அதில் வெற்றியும் கண் டார்கள். சமய பாடத்தை வலி யுறுத்திக் கற்பித்தனர். மக்கள் ஒழுங்காகவும், அமைதியாகவும் வாழ்க்கை நடாத்தினர். கல்வியி லும் முன்னேற்றமடைந்திருந்த னர். மேலும் சமய இலக்கியங் கள் சமய வரலாற்றுண்மைகளே யும், விஞ்ஞான ரீதியான உண் மைகளேயும் எடுத்துக் கூறுகின் றன. இவை நிபந்தனையுடன் கற்கப்படும்போது மாணக்கர் இவற்றை நுணுகி ஆய்ந்து அறி வியற் சிந்தனைகளே விருத்திசெய் யலாம்.

மொழிப்பற்று, நாட்டுப்பற்று என்பன ஏற்படுதற்கு மதப்பற் றும் அடிப்படையானதொன்ரு

கும். ஈ ரா ன் மக்களுக்கிருந்த மதப்பற்றுத்தான் முன்னுள் மன்னர் ஷாவை வெளியேற்றியது. இலங்கையில் வாழும் பெரும் பான்மைச் சமூக மக்கள் மத உண்மைகளை அறிந்து அவற்றிற் கேற்ப ஒழுகி வந்திருந்தால் வன்முறைகளுக்கு இடமேயிருந்திராது. நாட்டின் கௌரவமும் பேணப்பட்டிருக்கும். எனவே தேசிய ஒருமைப்பாடு ஏற்படுதற்கும், ஜனநாயகப் பாரம்பரியங்கள் பேணப்படுதற்கும் நாட்டில் சமயபாடக் கல்வி கட்டாயமாக இருத்தல் வேண்டும்.

கடந்த ஆட்சிக்காலத்திலேயே சமய பாடத்தைக் கட்டாய பாடமாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இன்றைய நிலையை நன்குணர்ந்த தற்போதைய அரசாங்கம் புத்தி சாதுரியமாக கல்வி வெள்ளையறிக்கையில் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வலியுறுத்தியுள்ளது. இது சமயபாடம் கட்டாய பாடமாக இருத்தல் வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

அறிவு தீக்குச்சி போன்றது
உராயும்போதுதான்
ஒளி விடுகிறது.

## கருத்துமோதல் — அடுத்த் போட்டி

**ஈழத்தில் தமிழனின் பண்பாடு வளர்ந்துள்ளது.**
**— இல்லை குறைந்துள்ளது.**

இவற்றிற்குச் சாதகமாகவும், பாதகமாகவும் தோன்றும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்.

**விதிகள் :**

★ தயவுசெய்து தெளிவாகவும், ஒழுங்காகவும் எழுதி அனுப்புங்கள்.

★ ஒருவரே சாதகமாகவும், பாதகமாகவும் வாதங்களை ஒருங்கிணைந்து எழுதக்கூடாது.

★ தைத்திங்கள் பத்தாம் (10—1—82) நாளுக்குமுன்னர் உங்கள் வாதத்தை அனுப்புங்கள்.

★ சிறந்த வாதங்களுக்கு இருசார்பிலும் பரிசுகள் உண்டு.

★ தகுந்த ஆதாரங்களுடன் சுருக்கமாக ஆனல் — தெளிவாக இருபக்கங்களுக்கு மேற்படாமல் முழுத்தாளில் (18" × 4") உங்கள் வாதத்தை (கூடுமானல் ஒரு பக்கத்தில் மட்டும்) வரைந்து அனுப்புங்கள்.

★ ஆக்கங்கள் அனைத்தும் வெளியீட்டாளரின் முகவரிக்கே அனுப்பப்படவேண்டும்.

# எமது நாட்டில் இன்று சமயபாடம் கட்டாய பாடமாக இருக்கத்தேவையில்லை

"எமது நாட்டில் இன்று பாட சாலைகளில் சமய பாடம் ஒரு கட்டாய பாடமாக இருக்க வேண்டும்" என்ற கருத்து இன்று பலமடைந்து வரும் இச்சந்தர்ப்பத்தில் 'அது' ஒரு 'கட்டாய' நிலைக்கு உட்படுத்தப்படாமல் கட்டாயம் அல்லாத நிலையில் வைத்துப் போதிக்கப்படுவதால் ஏதும் 'குறைபாடு' ஏற்படுமா?

**பரிசு பெறுபவர்**
**எஸ். டேவிட்**

ஏற்பட்டுள்ளதா? ஏன் கட்டாய நிலைக்கு உட்படுத்தபட வேண்டும் என்றெல்லாம் (எம்மை) சிந்திக்கத் தூண்டுகின்றது—எமது நாடு,

★ போதி மரத்தடி ஞானத் தரிசனத்தில் பூத்த — புத்தரின் —தர்மம் கூறும் — பௌத்தம்!

★ குப்பையைத் தலையில் கொட்டிய யூதப் பெண்ணுக்கு இரக்கம் காட்டி மன்னிப்பு அருளிய அண்ணல் நபியின் அருள் கூறும் — இஸ்லாம்!

★ நிலையான ஆன்மீக வாழ்வுக்கு ஆயிரம் அர்த்தங்கள் கற்பிக்கும்—இந்துமதம்!

★ "மறுகன்னத்தைக்காட்டு" —மன்னிப்பு, பொறுமை தத்துவங்களை இயம்பிய யேசுவின் —நாமம் கூறும் கிறிஸ்தவம்!

என்ற நான்கு மறைகளின் சங்கமத் தொட்டில்! — ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தாலாட்டுக் கீதங்கள் பாடி வளர்த்தெடுக்க—இங்கு இக்கீதங்களை ஒரு 'கட்டாய கீதமாக' அமுல்படுத்தத்தான் வேண்டுமா? 'தானாகக் கனிய வேண்டிய கனிகள் தடியினால் அடித்துக் கனிய வைக்கப் போகும் ஒரு மறைமுக உணர்வு ஏற்படவில்லையா?

மனித வாழ்வில் மதம் வகிக்கும் முக்கியத்துவம் அளப்பரியது. சமுதாய வரலாற்றில் அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார துறைகளில் இதன் ஊடுருவல்களுக்கு நிறையச் சான்றுகள் உண்டு! —குறிப்பாக கீழைத்தேய நாடுகளின் சமுதாய — மனித இரத்தங்களில் மதஉணர்வு இரண்டறக் கலந்த நிலை! —எனி

னும் இன்றைய காலச் சூழ்நிலை யில் — இளம் தலைமுறையினரி டையே மத உணர்வு — பற்று அருகி வருகின்ற போக்கு ஒரு கசப்பான உண்மை! — எமது நாடு இதற்கு வ்திவிலக்கல்ல— மனித வாழ்வின் முழுமை— ஆரோக்கியமான ஆன்மீக வாழ்வை வேண்டி நிற்கின்றது. இத்தகைய ஆன்மீக வாழ்வுக்கு அத்திவாரம் இடும் நல்ல ஸ்தா பனம் பாடசாலைகளே!

பாடசாலைகளில் மாணவர்க ளுக்குப் போதிக்கப்படும் பாடங் களில்—அன்பை, பண்பை, மனித முழுமையை, இரக்கத்தை, பக் தியை, ஒழுக்கத்தைப் போதிக் கும் ஒரேயொரு பாடம்—ஆன்மீக தத்துவம் கூறும் —சமய பாடமே யாகும்.

இச்சமய பாடத்தைக் கட்டாய பாடமாகப் போதிக்கப்படத் தான் வேண்டுமா? நல்ல பண்பு களைப் போதிக்கும் இந்த ஆன்மீக போதனைக்குக் 'கட்டாயம்' என்ற எல்லைப்படுத்தல் (outline) அவசி யமா? எந்த ஒரு பாடத்தையும் போதிக்கும் விதத்தில் போதித் தால் அது நிச்சயமாக மாணவர் சிந்தனையைச் சுண்டி இழுக்காமல் போகாது.

'கரைத்தவர் கரைத்தால் கல் லும் கரையும்' — என்பார்கள். பள்ளிகளில் சமய பாடங்களைப் போதிப்பதற்கு 'உளவிய ,ல் உணர்ந்த நல்ல—தரமான ஆசிரி யர்கள் அவசியம் இளம் உள்ளங் களில் சந்தேகங்களுக்கு இடமற்ற வகையில் — தர்க்கரீதியான சிந்த னைக்கு இடம் அளித்து — அக்கு வேறு ஆணி வேருன பாணியில் போதனைகளைப் பசுமரத்தாணி யாகப் பதிய வைத்தால் அது பிற்பட்ட பகுதியில் — கட்டாய பாக எழுகின்ற சந்தேகங்களுக்கு நியாயம் கற்பிக்க உதவியாக அமையும்! இவ்வாருன போதனை யைக் 'கட்டாய பாடம்' என்ற நிபந்தனைக்கு உட்படுத்தித்தான் போதிக்க வேண்டுமா?

| பாராட்டுப் பெறுபவர்கள் |
|---|
| 1. பெஸ்லியோ லாஸ் ஏருவூர் - 4. |
| 2. எஸ். கே. ஏ. தேவராசா நெடுந்தீவு - 1 |

'கட்டாய பாடம்' என்ற நிபந் தனை 'மதிப்பெண்களை' போட்டி போட்டுக் கொண்டு மாணவர் கள் பெற்றுக்கொள்ள ஊன்றிப் படிக்கத் தூண்டுதல் அளிக்கலாம். ஆனல் மாணவர்களின் சிந்தனை களில் ஆன்மீக உணர்வின் "கேள் விக்கோடு" உயர் நிலைக்கு—நீண் டிருக்கும் என்பதில் என்ன நிச்ச யம் உண்டு?

மாணவர்கள் பள்ளி வாழ்க் கையை விட்டு விலகியதும் 'கட் டாயம்' என்ற நிபந்தனையில்

லைவத்துப் போதிக்கப்பட்ட மதக் கருத்துக்களை விமர்சித்து — தட்டிக்கழிக்க முனையும்போது அதனை யார் தடுத்து நிறுத்த முடியும்? 'தனி மனித உரிமை'க்கு அழுத்தம் கொடுத்து, மத வாழ்வை விட்டு விலகி நின்று வாழ முனைந்தால் — அப்போது கட்டாய (கல்வி) பாடம் என்ற நிபந்தனை விதையில் முளைத்து விளைந்த அறுவடையின் பெறுமதி தான் என்ன ?

நடைமுறையில் போதிக்கப்படுகின்ற ஏனைய பாடங்களைப் பொறுத்தவரை; படித்த படிப்புக்கும், பற்பகுதியில் செய்கின்ற தொழிலுக்கும் — சிலவேளை ஒரு 'தலைகீழ்' விகிதமான போக்கு காணப்படுவது — நம் நாட்டு அனுபவம் இந்நிலை சமய போதனையின் பெறுமதிக்கு அமையாது என்பதையிட்டுத் தீர்க்கதரிசனம் கூற முடியுமா ?

எல்லா மதபீடங்களும் சமயத்தை ஒரு கட்டாய பாடமாகப் போதிக்கப்பட வேண்டும் என்ற ''கோரஸ்'' குரலுக்கு — அரசு தூய மனத்துடன் 'இசைவு' முக்கியத்துவம் அளிப்பதில் ஒரு 'மூடு மந்திரம்' இல்லாமல் இல்லைப் போல் தென்படுகின்றது. ஒரு மதத்துக்கு மட்டும் 'மேலான' அந்தஸ்து அளித்து ஏனைய மதங்களுக்குப் 'பாதுகாப்பு' பிச்சை வழங்கியிருப்பது குறித்து 'குறை கூறும் கண்களுக்கு' ஒரு 'கவர்ச்சிப் போஸ்' கொடுக்க முனையும் 'குளறு வித்தை' — எனத் (தவறாகவேனும்) ஏன் சிந்திக்கக் கூடாது'?

எது எப்படி இருந்தாலும் ஏனைய பாடங்களைக் கட்டாய பாடமாகப் போதிக்கப்படுவதைப் போன்று ஆன்மீகத் தத்துவம் கூறும் சமய போதனையைக் 'கட்டாயம்' என்ற நிபந்தனைக்கு உட்படுத்துவது நியாயமாகத் தென்படவில்லை. அது சாதாரண நிலையில் வைத்துப் போதிக்கப்படும் விதம் திருப்திகரமானதான வழியில் அமைந்து மாணவர் உள்ளங்களில் ''சமய போதனை மிக முக்கியமானது'' — என்ற உறுதிப்பாட்டுத் தன்மையை ஏற்படுத்த வேண்டும்! இது ஆசிரியர்களின் போதனை, வசீகரத்தில் வெற்றி பெற வாய்ப்புண்டு! — இதை விடுத்துக் கட்டாய பாடமாக்குவது என்ற கருத்து— 'சுவைத்துப் பருகிக் குடிக்கும் பாலை, சப்பி அசை போட்டு விழுங்கு' என குழந்தையை நிர்ப்பந்திப்பதற்கு ஒப்பான வாதமாகத்தான் தென்படுகின்றது.

இந்தக் கட்டாய போதனை என்ற சிந்தனையில் மண்டையைப் போட்டுக் குழப்புவதை விடுத்து, மாணவ உள்ளங்களின் மனத்தை உறுதியான முறையில் ஆன்மீக சிந்தனைப் பக்கமாகத் திசைதிருப்பத்தக்க வேறு வழிமுறைகளைப்

பற்றி எண்ணிப்பார்த்தால் என்ன? ஏன் வேறு 'வழி'கள் இல்லையா?

ஒரு நாட்டில் நல்ல சமுதாயம் வாழுகிற தென்பதை வெளிக் காட்டுவது—அந்நாட்டின் கலாச்சாரம்! அக்கலாச்சாரத்தை ஸ்திரப்படுத்துவது நேரிய வழியிலான 'சமுதாயப்படுத்தல்'—இச் சமுதாயப்படுத்தலின் வெற்றிக்கு அடிநாதம் — ஆன்மீகப் பண்பு செறிந்த ஒழுக்கம்! —இந்த ஆன்மீக ஒழுக்க சீலர்களை உருவாக்கும் ஸ்தாபனம் — பாடசாலை! —எனவே இங்கு போதிக்கப்படும் சமய போதனை 'கட்டாயம்' என்ற வரையறைக்கு அப்பாற்பட்ட நிலையில் நின்று ''மனித வாழ்க்கைக்கு அவசியமானது'' என்ற பற்றுறுதியை உருவாக்கும் விதத்தில் 'சாதாரண ஸ்தானத்தில்' நின்று போதித்தால் பயனுள்ளதாக அமையும் என்பது எனது வாதம்!

வெளியுலகிலே ஒருவன் எவ்வளவு அதியற்புத மனிதனாக விளங்கினாலும் அவனுடைய மனைவியும் வேலைக்காரனும் அப்படி அதிசயிக்கும்படியான எதையும் அவனிடம் காண்பதில்லை.

— மாண்டெயின் —

சிந்தனை செய்யும் தனித்திறன் காரணமாகவே மனிதன் உயர்தவனாகக் கருதப்படுகிறான். சிந்தனையால் சாதிக்கமுடியாதது ஒன்றுமில்லை. மனிதனாகப் பிறந்தவன் கட்டாயம் சிந்திக்க வேண்டும். சிந்திக்கச் சிந்திக்கத்தான் மனிதனது எண்ணங்கள் உயரிய உருப்பெற்றுச் சிறப்படையும் சிந்திப்பது மனிதனது தனிஉரிமை! சிந்திக்கத் தெரிந்தவனே மனிதன்

— ஐன்ஸ்டைன்

# பிறப்பெடுப்போம்!

சமுதாய ''ஆலயத்தில்''
சுரண்டல் 'வியாபாரிகள்'
சமகாலக் கிறிஸ்துக்களே
எடுங்கள் சாட்டைகளை !

சவப்பெட்டியில் சங்கமிக்கும்
'லாசரா'ம் ஏழைகள்
புரட்சிக் கிறிஸ்துக்களே
புறப்படுங்கள் 'புதுமை' செய்வோம் !

'அரசரா'ம் இவர்களெல்லாம்
அவர் 'சொல்லும் வார்த்தை'கள்
ஆதலால் கிறிஸ்துக்களே
வாருங்கள் அரசமைப்போம் !

சிந்தித்தால் சிறையாம்
சந்தித்தால் 'சிலுவை'யாம்
சிந்தனைக் கிறிஸ்துக்களே
வாருங்கள் 'அறைபடுவோம்' !

உண்மையின் உயிர்குடித்து
'கல்லறை'க்குள் தள்ளலாமாம்
இளம் கிறிஸ்துக்களே
வாருங்கள் 'உயிர்த்தெழுவோம்'!

கற்பனையைத் தகர்த்துவிட்டு
நற்செய்தி நடைமுறையில்
இத்தனையும் ஆற்றுதற்கு
கிறிஸ்துவாகப் பிறப்பெடுப்போம் !

மன்னார்க் 'கங்கை'

சிறுகதை

# எண்ணங்கள் மாற்றப்படும்போது

"ஏம்மா சும்மா தொணக்கிறீங்க..... அவுங்கெல்லாம் புத்தியில்லாம இந்த இடத்த விட்டு போயிட்டாங்களு நம்மளும் போயிறனுமா?........."

"அதுக்கில்லப்பா நம்ம சாதி சனமெல்மாம் ஒன்னு மண்ணு புள்ள குட்டியா பழகுனதுககூட அத்து வழியப்பார்த்து போயிரிச்சிக நம்மலும் நேரங்காலத்தோட அங்கிட்டு போயிடுவம்..... ஏதோ ஒனக்கும் கிட்டவாப் போகும்னு தான்.... சொன்னேன்"

ப. எ. அன்ரன்
கன்னுட்டி

சமுதாயப் பிடுங்கள், சுரண்டல், கூலிமுறை இவற்றிற்குகெல்லாம் ஈடுகொடுத்து சூறுவளியோடு போட்டிபோட்டு தப்பி நிற்கும் மரத்தைப்போல் ராகவனும் பல்கலைக்கழகம் புகுந்து மலையக வாழ்க்கைக்கு மறுமலர்ச்சி தேடுபவனுக தன்னை நினைத்துக்கொண்டு பேசியதில் தப்பில்லை. ராகவனைப் பொறுத்த மட்டில் அவன் பல்கலைக்கழகத்தில் புகுந்து படிப்பதே பெரும் சாதனை. யாழ் வளாக நுழைவு பெற்று இரண்டு வருடங்களாகி விட்டன. இவனைப்போல் ஒரு ஏழைத்தொழிலாளியின் மகன் பல்கலைக்கழகம் புகுந்ததையிட்டு அந்தத் தேயிலைத் தோட்டத்தில் மனம் மகிழ்ந்த சில தொழிலாள குடும்பங்களைவிட மனம் புழுங்கிய தோட்ட நிர்வாகிகளும் கங்காணி குடும்பங்களுமே அதிகம்.

அன்று ராகவன் இரண்டு நாள் விடுமுறையில் தன்வீட்டிற்கு வந்தபோது தாய் தங்கம்மாள் எல்லோரும் வவுனியாப் பகுதியில் குடியேறிவிடலாம் என்று வற்புறுத்தினுள். ஆனுல் அவனே மலையகத்தை விட்டு வெளியேறப் போவதில்லையென்ற மனே நிலையில் இருந்தான். அவனது மனே நிலைக்குத் தகுந்தாற் போல் அவனது ஒரே தமையன் முத்துவும் இருந்தான். அந்நேரம் பார்த்து வீட்டிற்கு வந்த முத்து.

"அம்மா நம்ம என்ன அங்கிட்டு இங்கிட்டு போயா? சம்பாரிச்சு தங்கச்சி மார கட்டிக் குடுத்து அப்பா இல்லாம சீவிச் சோம்? என்ன சொன்னுலும் இந்த சிங்கள சனங்க நம்மளோட நேசமா இருக்குதுக பேசாம இருந்துடுவம்".........

முத்து இவர்களின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்ததுபோல் கதைத்து முடித்துவிட்டான், தாயானவளோ கடந்தகால நினைவலைகளில் மிதந்து நின்ருள்

கணவன் இறந்தபிறகு ஒண்டிக் கட்டையாக உழைத்தாள். அந்த உழைப்பு குடும்பத் தாபரிப்புக்கு காணவில்லே. அதனுல் ஐந்தாம் வகுப்போடு படிப்பை முடித்து விட்டு பக்கத்து 'ரவுனி'ல் ஒரு 'பாண்' பேக்கறி முதலாளியிடம் 'பாண்' விற்பனே செய்பவனுகச் சேர்ந்தான். பின்னர் அவனே 'பேக்கறி' 'பாண்' போடுபவனுக வும் இருக்கிருன். ஆனுல் அந்த வறுமை நிறைந்த சூழ்நிலேயிலும் தம்பி ராகவனே 'ரவுனு'க்கு அனுப்பி படிக்கவைத்து தங்கை யர் இருவரையும் திருமணம் செய்துவிட்டார்கள். தாயும் மூத்த மகனும்.

ஏதோ பெரிய முயற்சியின் பேரில் எத்தனேயோ கேள்விகள் ஆவணங்களேச் சமர்ப்பித்து குடி யுரிமை பெற்றுவிட்டார்கள் ஆனுல் இவர்களின் ஒட்டிய உற வினர்களோ சிறிமா – சாத்திரி ஒப்பந்தத்தின் விளைவால் உறவு களேக் களேந்து தாயகம் சென்று விட்டனர் தங்கம்மாளும் போக ஆசைப்பட்டாள். ஆனுல் தொழிற்சங்கத் தலேவர்களோ தங்கள் சுயலாபம் காரணமாக எதிர்காலத்தில் மலேயகம் ஏதோ பெரிய வாழ்வு அளித்துவிடப் போகிறதென ஏமாற்றியதால் அங்கேயே தங்கிவிட்டாள். அவ ளுடைய ஆசைகளும் கனவுகளும் அங்கேயே சங்கமித்துவிட்டன.

தேசியமயப் போர்வையில் நடந்த திருகுதாளங்கள் மலேயக சமூகத்திற்கே திக்கற்ற நிலே மையை உருவாக்கியதை அந்த மக்கள் அப்போதுதான் உணரத் தலேப்பட்டனர், ஆம் அம்மை யாரின் ஆட்சியில் நடந்த உண வுப் புரட்சியின்போது எங்கும் மரவள்ளி 'சகாப்தம்' மாற்றுப் பயிர்ச்செய்கை என்ற திட்டத் தில் தேயிலேச்செடி பிடுங்கல். இந்தப் பிடுங்கல் மலேயகத் தொழிலாளர்களின் வாழ்வைப் பிடுங்கியது. இந்நிலேயில் வறட்சி வேலேக் குறைப்பு. மறுபக்கம் சிங்கள மக்களுக்கு தேயிலேத் தோட்டங்கள் பகிர்ந்தளிப்பு. எல்லாமாக அந்த மக்களே வாட்டி வதைத்தன.

குடும்ப வாழ்விற்காக 'பேக் கறி'யில் சேர்ந்த முத்துவிற்கோ காலே நான்கு மணி தொடங்கி 'பாண்' விநியோகம். இரவில் 'பேக்கறி' வேலே. தம்பியை படிக்கவைப்பதில் அக்கறையான அவனுக்குத் திருமணம் பேசப் பட்டபோதும் அதை வேண்டா மென ஒதுக்கிவிட்டான். 'பாண்' வாங்க கியூவில் நின்ற காலத்தில் அந்தச்' சிறிசேன' பண்டாவின் குடும்பத்தில் இப்போ வளர்ந்து விட்ட திலகரட்ன என்பவன் சிறு வனுகவிருந்தான். கடுமையான வருத்தம் கட்டாயம் 'பாண்' சாப்பாடுதான் தேவை. சிறிசேனுவின் மனேவியோ குடும்ப கௌரவத்தினுல் 'கியூ'வில் நிற்கமுடியாத நிலே இந்நிலேயில் இதைக் கேள்வியுற்ற முத்து 'பாண்' துண்டுகளே

'பாலித்தீன்' பைகளில் கட்டி 'பனியனுக்குள்' வைத்து 'சிறி சேனு குடும்பத்திற்கு கொடுத்து உதவினுன். முத்துவின் இனிய சுபாவத்தினுல் சிக்களவர்களும் இவனேடு நன்ருகப் பழகினர். தம்பியை சர்வகலாசாலேக்கு அனுப்பியதில் பெருமைப்பட்டுக் கொள்வான். உள்ளூறப் பொருமைப்பட்டாலும் மெச்சுவார்கள்.

எத்தனேயோ சிங்கள மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெருமலிருந்தும் பல உத்தியோகங்களிலும் படைப் பிரிவுகளிலும் இருப்பதை முத்து அறிவான். முத்துவின் தோட்டத்தில் மேல் மட்ட உத்தியோகத்தர்களின் பிள்ளேகள் பலர் ஏதோ விதத்தில் உத்தியோகமோ, ஏதோ நிறுவனங்களின் உரிமையாளர்களாகவோ இருந்தனர். தோட்டக் கூலியின் பிள்ளேகள் தகுதியிருந்தாலும் தட்டிக்கழிபடுவது தெரிந்த ஒன்றுதானே. பல்கலே நுழைவு கிடைத்தவுடன் 'ராகவனு'ம் முத்துவுமாக இங்கே மலேயகத்தில் தங்களேப்போன்ற தொழிலாளர்களின் குடும்பப் பிள்ளேகளே கல்வியறிவு பெறச் செய்து புதிய சமுதாயம் உருவாக்குவதென உறுதி பூண்டார்கள். எத்தனேயோ வன்செயல்கள் காடைத்தனங்கள் இவற்றிற்கெல்லாம் ஈடு கொடுத்தார்கள். அந்தந்த ஒப்பந்த, வன்செயல்களின்போது தொழிலாள குடும்பங்கள் இடம் பெயர்ந்தபோதும் கூட இவர்கள் மலேயகமே கதியென நம்பியிருந்தனர். அதற்கேற்ருற்போல் 'சிறிசேனு'வின் மனேவி..

''முத்து நீங்க எல்லாம் இங்சிருந்து போகப்படாது...... நம்ம உடம்ப வெட்டினு ரத்தம் செவப்புதானே...... எங்கட மகன் சின்ன புள்ளயாக இருக்கக்குள்ள நீங்க செஞ்ச நன்றி எல்லாம் நாங்க மறக்கஇல்ல...என்ருள்.''

ஆம் உணவுப் புரட்சியின் போர்வையில் திடீரென ஏற்பட்ட உணவு மாற்றங்களால் 'காலரா' வாந்திபேதி நோய் தீவு அடங்கினும் பரவியபோது.. சிறுசேனுவின் மகன் திலகரட்னுவும் பாதிக்கப்பட்டான். அவனுக்கு வைத்தியர் 'பாண்' கொடுக்கச் சொன்னபோது 'பாணே'ப் பெறுவதில் பெரிய சங்கட நிலே. அந்நிலேயில் தனக்கு சாப்பாட்டிற்கு கிடைத்த 'பாணே' முத்து கொடுத்துதவினுன். அத்தோடு சில உதவிகளேயும் செய்தான். ஒரே மகனுன 'சிறிசேனு' காப்பாற்றப்பட்டான். திடகாத்திரமான 'முத்து'வின் இரத்தம் ஒருமுறை 'சிறிசேனு'வின் குடும்ப உறவினரின் உயிரைக் காப்பாற்றியது. இந்த ஒற்றுமைகள் நிலேத்திருக்குமென்ற மனே நிலேயில் சகோதரர்கள் மலேயகத்தைப் பற்றி அதிகம் சிந்தித்ததில் தவறில்லே'

ஆனல் தாயோ அன்ருடம் நடக்கும் அட்டூழியங்களை மையமாக வைத்து வடக்குப் பக்கம் போவது உசிதமென நினைத்தாள். தாயிற்கு சமாதானம் சொல்லிவிட்டு பல்கலைக்கழகத்துக்கு திரும்பும்போது....

......''அண்ணு வவுனியாப்பக்கம் போற யோசனையை கைவிட்டுடுவம்.....நம்ம தொழிலாளிக எங்கே இருந்தும் பாடுபடுறது தான். சிங்கள மக்கள் நம்ம நியாயமான உரிமைகளைவிட்டுத் தருவாங்க நம்பிக்கை வீண் போகல''.....என்று நியாயப்படுத்திவிட்டுப் போனுன்.

நாளொரு விபரீதங்கள் தமிழர்கட்கு ஏற்படுவது இயல்பாகிவிட்டது இலங்கையில் அன்று பல்கலைக்கழக இளைஞர்களோடு மலையக மக்கள் அங்கேயே வாழ முடியும் என்று வாதாடி விட்டு வந்தான். வெளியில் வரும் பொழுது இன்னெருு மாணவன் ''அடே மச்சான் ராகவன் உனக்கு 'ஏர்ஜன்ட்' டெலிகிறும் வந்திருக்கடா 'என்று நீட்டினுன். தந்தியை வாங்கிப்படித்த இராகவனின் முகம் வாடியது தந்தியை சகமாணவனே வாசித்தான்.

''அண்ணுவிற்கு உயிராபத்து உடன், வரவும்'' தாய். ''அடே மச்சான் என்ன வருத்தமாகக் கிடந்தவரோ ?'' என்ருன். ''இல்லை மச்சான் என்னுடைய அண்ணு வருத்தம் வந்தாக்கூட படுக்கமாட்டார்'' நான் உடனே போகவேண்டுமென்ருன்.

வடக்கில் பதட்டநிலை அதை விட மலையகம்; இந்நிலையில் தோட்டத்திற்கு வந்து சேர்ந்தான்: தனது லயனில் கூட்டம் பொலிசார் எல்லோரும் தாயின் அலறல் ஓலம் விபரீதத்தை புரிந்து கொண்டான். அங்கே தலையில் கட்டுடன் உயிரற்ற சடலமாகக் கட்டிலில் கிடந்தான் முத்து. ஓலங்கள் ஒப்பாரிகள் உயிரை மீட்டுவருமா ? கத்தினுன் கதறினுன் விசாரணைகள் நேர்ந்திறுக சடலம் அடக்கமாகிவிட்டது.

''தம்பி சொன்னேனே கேட்டியாடா போயிருவம்.....போயிருவம்னு விட்டிட்டு போயிட்டானே;......உசிர் போகு முந்தி கடதாசி ஒங்கிட்ட குடுக்கச் சொன்னும்பா''.....என்று தாய் பிரலாபித்து ஒரு கடிதத்தைக் கொடுத்தாள் கடிதம் பேசியது''

''தம்பி அம்மாவைப்பார்த்துக் கொள். நீ போன அடுத்தநாள் யாரையோ படைவீரர்களை சுட்டு விட்டார்களாம். யாழ்ப்பாணத்தில் அந்தப்படைவீரர்ஒருவர் சிறிசேனுவின் மகனின் நண்பனும். அவரும், முன்னெருமுறை நான் இரத்தம் கொடுத்தேனே அவருமாக என்னைக்கொன்று இரத்தத்தைக் குடிக்கப்போவதாக துரத்தினுர்கள். நான் தப்பித்து ஓடி பொலிசில் முறைப்பாடு செய்ய நினைத்தேன். அங்கும் நமக்கு

வேறுவித வரவேற்பு. அதனால் தம்பி நம்மை வரவேற்க ஒரே ஒரு இடம். அம்மா சொல்படி போய்விடு இது அவர்கள் பூமி யாம். நாம் எடுத்த சபதங்கள் சபலங்களே, உயிர் நாடி என வர்ணிக்கப்பட்ட தேயிலை பறி போனபோது நமது உரிமைகளும் சிதைந்துவிட்டன. மாற்றங்கள் தேவை நாம் பாட்டாளிகள் எனவே நான் இவர்களின் மோசக் கரத்தால் நெரிக்கப்பட்டாலும் என் இரத்தம் இங்கே காய்ந்து விட்டாலும், அந்த மண்ணுக்கு நம்மை கௌரவிக்கும் தன்மை யுண்டு....காரில் சிறிசேனுவின் மகனும் மற்றவனும் வருகிறார் கள் நான் ஓடுகிறேன்.''

அதன் பின்னர் தன் மகனையே குற்றம் சாட்டினாள் திலகரட்ணவின் தாய். நடந்தது இதுதான்.....வடக்கில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் பலியான படைவீரர் ஒருவர் இவர்களுக்கு வேண்டியவர்களாம். ராகவனும் யாழ்ப்பாணத்தில் படிக்கிறான் இன்னும் சில காலத்தில் பட்டதாரி இதெல்லாம் சேர்த்து செய்நன்றியை மறக்கச் செய்து தனக்கு 'பாண்' ரொட்டியை மார்புக்குள் வைத்து கொண்டு வந்த முத்துவை தனக்கு இரத் தானம் செய்து உயிரைக்காத்த முத்துவை மார்பில் குத்தினார்கள் மண்டையைப் பிளந்தார்கள்...... செந்நீரை பூசிக்கொண்டார்கள். இதுதான் அவர்களின் நேசக்கரம். ''அம்மா சீலையைக் கட்டுங்க சாமான் எல்லாம் கட்டிக்கிட்டு போவம்''

'அட என்னப்பா மூணும்குழி மூடல அதுக்குள்ள எங்கே போக? ''அம்மா உங்க விருப்பப்படி போறேன் இங்கிருந்தா இன்னொரு மூணும்குழி யாருக்காவது வரும் அதை சரியான மூணும் குழியாக் கிடனும்''. புறப்படுங்க.

ஆயத்தங்கள் முடிந்து புகை வண்டியில் போகின்றார்கள் சமுதாயம்; சபதங்கள் யாவும் பின் னோக்கி ஓடி விட்டன. இதோ சமவெளியில் வண்டி போகின் றது. இனி இவன் இலட்சியங்கள் கனவல்ல என்பதற்கு அடையாள மாக மதவாச்சி புகையிரத நிலையத்தில் பச்சை விளக்கு காட் டப்பட்டு விட்டது. எண்ணங்கள் மாற்றப்படும்போது இலட்சியங் மாறத்தான் செய்யும்.

(யாவும் கற்பனை)

---

**திருத்தம்:-** குறுக்கெழுத்துப் போட்டி மேலிருந்து கீழ் இல. 12 இற்குரிய கேள்வி பின்வருமாறு;

இவர்களை இழிவுசெய்யும் மடமையைக்கொழுத்துவோம் என்றான் பாரதி

# அர்த்தமுள்ளதாக்குவோம்

பாலகன் யேசு பிறந்திடவே நத்தார்க்குடில் அமைப்போம். அது நம் உள்ளத்தில் இருக்கட்டும் இயேசுவை காண தாழ்ந்த குடிலிலே குனிந்து செல்ல வேண்டுவது போல இயேசுவை நாம் காண தாழ்மை உள்ளவராவோம் உள்ளத்திலே.

உள்ளமென்னும் குடிலுக்கு 'சேவையுணர்வு' எனும் கூரையிடுவோம். 'அன்புணர்வு' எனும் வைக்கோல் பரப்புவோம். உள்ளத்திலே சாந்த குணத்தால் பாலன் இயேசுவுக்கு தொட்டில் கட்டுவோம் 'நல்ல பண்புகள் எனும் துணியில் சுற்றிவைப்போம். அக்குடிலை 'மலர்ந்த முகம்' இனியபேச்செனும் 'பல்புகளால்' ஒளியுள்ளதாக்குவோம்.

'பசுமை எண்ணமெனும்' நத்தார் மரத்தை நாட்டுவோம் உள்ளத்திலே அம்மரத்தை அன்பு, பொறுமை கனிவு, நன்றியுணர்வு; பெருந்தன்மை என்னும் 'பலூன்களால்' அலங்கரிப்போம். 'மனிதாபிமானம்' அம்மரத்திலே மின்மினிகளாகட்டும்

வெட்டிப் பகிர்ந்திடும் 'நத்தார்க் கேக்' இம்முறை வறுமையில் வாடுவோர், நிம்மதியிழந்தோர், பிரச்சினை மத்தியில் வாழ்வோர் ஆகியோர்க்கு நாம் காட்டும் அனுதாபமும்; அக்கறையுமாக இருக்கட்டும்.

ஏழை பணக்காரன் – பெரியவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடின்றி ஆலயத்தில் அனைவரையும் ஒன்றாக மதித்து வாழ்ந்திடும் 'சமத்துவ உணர்வு' நாம் நத்தாரன்று அணிந்திடும் புத்தாடையாக இருக்கட்டும்.

நமது நேரத்தை – பணத்தை – பொருளை முடியுமானவரை பகிர்ந்திடும் 'பகிர்ந்துணர்வு' நமது உள்ளத்திலே 'நத்தார்ப்பப்பாவாக' வருகை தரட்டும்.

வைப்போம் நத்தார் விருந்து உண்டு களித்திடும் நண்பருக்கில்லை பசித்து வாடிடும், நத்தார் கொண்டாட வழியின்றி பரிதவிக்கும் ஏழையர்க்கும் எளியவர்க்கும்.

நம் இதயத்தில் இருந்து எழவேண்டிய 'சமாதானம்' எனும் கீதமே இம்முறை 'நத்தார்க் கீதமாக' ஒலிக்கட்டும். வருகின்ற புத்தாண்டிலே நம் நாளாந்த வாழ்விலே இந்த 'சமாதானம்' எனும் கீதம் தொடர்ந்து ஒலித்திட உள்ளமெனும் 'கொட்டிலே' அவை பதிவாகட்டும்.

அன்பு தேவன் – சமாதானத்தின் இயேசு பிறந்த நாள் வெளி யாடம்பரங்களால் இம்முறை அர்த்தம் இழந்து போய்விட வேண்டாம். காட்டுவோம் இம்முறை நத்தார் கொண்டாடு வதில் புதுமையை –

அப்போது "விண்ணகத்தில் இறைவனுக்கு மகிமை உண்டாகுக மண்ணிலே நல்மனத்தோர்க்கு அமைதியும் ஆகுக" என்று இறைவன் மனிதனுக்கு அனுப்பிய "நத்தார் வாழ்த்து நமக்கு அர்த்தமுள்ளதாகிவிடும்.

மைக்கல் ஆர். ஜோக்கிம்
கம்பளை.

தற்காலிகமான சிறிதொரு பாதுகாப்பை விலைக்கு வாங்குவதற்காக தங்களது அத்தியாவசியமான சுதந் திரத்தை விட்டுவிடுபவர்கள் சுதந்திரத்திற்கும் தகுதியான வர்கள் அல்ல. பாதுகாப்பிற்கும் தகுதியானவர்கள் அல்ல.

## வாழ்த்து

அமெரிக்காவில் தனது படிப்பை முடித்துக்கொண்டு நாடு திரும்பியிருக்கும் கரவையூர்ச் செல்வம் அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்!

புதிய ஆண்டிலிருந்து 'புதிய உலகி'லே அவர் பணி தொடரும் என்று நம்புகின்றோம்.

# புதுமைப் பதில்

அ. பா. பத்திநாதர்
புதுக்குடியிருப்பு

**உயிருக்குயிராகக் காதலித்து விட்டுப் பின்னர், பெற்ருேரின் தடையினுல் தற்கொலை செய்துகொள்ளும் காதலரைப்பற்றித் தங்கள் கருத்து யாது ?**

தாய்மரம் தன்னை மூடிமறைத்ததால் இனி வளர (வாழ) முடியாதென்று தன்னுயிரை இழந்த மாங்கன்றுக்கு இவர்களை ஒப்பிடலாம்.

*                    *

க. பீற்றர்
பண்டாரவளை

**அரசியல்வாதிகளை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு-இலங்கையில் தமிழர்களின் பிரச்சனைகள் தீரக் ''புதிய உலகம்'' கூறும் வழி என்ன ?**

அரசியல் சார்பின்றியே புதிய உலகம் பணிபுரிந்து வருகிருன். தன்னலம் அறுத்து, பிளவுகள் நீக்கி, அறவழி நாடி, அறிவுப் பாதையில் அடியெடுத்து வைப்பதே தமிழனின் விடுதலைக்கு முதற்படியாகும்.

செ: ஞானராஜா
செம்மண்தீவு

**அன்பு — அருள் இவற்றுக்கிடையான வேறுபாடு என்ன ?**

வேற்றுமை உண்டு என்று கூறுவது கடினம். ஏனெனில் இரண்டுக்கும் ஊற்ருய் விளங்குபவன் இறைவன். அன்பு சிலவேளையிலே மனித வட்டத்திற்குள்ளே மட்டும் நின்றுவிடுகிறது. அருள் என்பது இறைவனின்றிப் பெற முடியாததொன்று.

*                    *

மா: செல்வராஜா
புதுக்குடியிருப்பு

**இணைந்திருக்கும் இரு உள்ளங்களைப் பிரித்து வைத்து அப்பிரிவால் பெரும் மகிழ்வு கொள்ளும் ஓர் உள்ளத்தை எதற்கு ஒப்பிடலாம் ?**

மலரும் மொட்டு ஒன்று இதழாக விரிந்து நறுமணம் கமழ விடாது அதைப் பறித்துச் சேற்றிலே எறிந்த குரங்குக்கு ஒப்பிடலாம்.

எம். அசந்தா
பள்ளிமுனை

**சமுதாயம் எக்காரியத்திலும் பெண்களைச் சந்தேகக் கண்கொண்டு நோக்குவதேன் ?**

பெண்களை அவ்வளவுக்கு அவமதிப்பதில்லை எமது சமுதாயம். பெண்கள் இயல்பாகச் சந்தேகம் கொண்டவர்கள் என்ற உளவியல் கொள்கை ஓரளவுக்கு உண்மையாக இருக்கலாம். ஆனால் பிறர் என்னைச் சந்தேகிக்கிறார்கள் என்ற பயம்தான் தாழ்வு மனப்பான்மைக்கும், பாதிப்புக்கும் வித்தாக அமைகின்றது.

* *

வி. குமார்
காவலூர்

**இரக்கமற்றுத் தாக்கப்படும் ஈழத் தமிழரும், அகங்கார ஆட்சி நடத்தும் ஸ்ரீலங்கா அரசும ஒற்றுமையை எதர்பார்க்க முடியுமா?**

பேச்சு வார்த்தை நடைபெறுவதாகச் செய்தி கூறுகின்றது. பேச்சுவார்த்தையில் ஒற்றுமையா அல்லது கொள்கைகளிலே ஒற்றுமையா என்பது ஒருகேள்விக்குறி? பேச்சுவார்த்தை நீடிக்குமா அல்லது ஒற்றுமை நீடிக்குமா என்பது சொல்லமுடியாததொன்று. ஆனால் நாட்டிலே அமைதி ஊஞ்சலாடுகிறது.

* *

ஈ. பிறேமினி
நெடுங்கண்டல்

**அரசாங்க சொத்துக்களைத் திருடும் திருடர்களைக் கண்டுபிடிக்க முடியாதவர்கள் பொதுமக்களை வருத்துவது சரியானதா ?**

இன்று அரசாங்கச் சொத்தெல்லாம் தனியாருடையது. தனியாரின் சொத்துக்களும், உயிரும் கொள்ளையடிப்போருக்குரியது. இது பொதுவுடமையா அல்லது புது உடமையா புரியவில்லையே !

* *

செ. புஸ்பராஜா
செம்மண்தீவு

**சுயநலம் கூடாதென்றும் சுயநலம்பிடித்தவன் என்றும் பேசுகிறீர்களே அப்படியானால் திருவள்ளுவர் ஏன் இப்படிக் கூறவேண்டும் ?**

தன்னைத்தான் காதலன் ஆயின்—
எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப்பால்.

ஒவ்வொருவரும் தனது ஒழுக்கத்தில் மாசு விளையக்கூடாது என்று கட்டுப்பாடாக வாழ்வதும் தன்னைக் காதலிப்பதுதானே. அந்தச் சுயநலம் சமூகத்துக்கே நன்மை விளைவிக்கக் கூடியதல்லவா ?

* *

எம். எம். றோசலின்
அடம்பன்

**மாணவர்கள் தாங்கள் செய்யும் பிழைகளை உணராது ஆசிரியர்கள் செய்யும பிழைகளைத் தூக்கிப்பிடிக்கின்றார்களே அவர்களைப் பற்றி என்ன நினைகின்றீர்கள் ?**

உயர ஏறியபின் கால் வலித்தால் ஏணி சரியில்லை என்று கூறுவது போலாகும்.

* *

எஸ். லதா
நெடுங்கண்டல்

**ஆசிரியர்கள் பிழைவிடும்போது மாணவர்கள் நீதியை எடுத்துக்கூறலாமா ? இது குற்றமா ?**

நீதியை எடுத்துரைத்தவர்கள் குற்றவாளிகளாகத் தண்டிக்கப்பட்டதற்கு வரலாறு சான்று கூறும். மாணவர்கள் ஆசிரியர்களை மதித்துத் தம் கருத்துக்களை கூறவேண்டிய இடத்தில் கூற வேண்டிய முறையில் கூறுவது அதிக நன்மை பயக்கும்.

# உங்கள் பார்வை

செல்வன் ஜெயா — ஏழாலை

புதிய உலகம் புரட்—ஐப்பசி (81) இதழிலும், ஆடி — ஆவணி (78) இதழிலும் கருத்துமோதலுக்கு ஒரே தலைப்பைக் கொடுத்துள்ளீர்கள். திரும்பத் திரும்ப ஒரேமாதிரியான தலைப்பைக் கொடுப்பதைத் தவிர்க்கலாமே!

* *

ஜே. அஜித் — யாழ்ப்பாணம்
அ. றஞ்ஜித் — யாழ்ப்பாணம்

பள்ளிப்பிள்ளைகளாகிய எமக்கு "சமூக அமைப்பில் சமூக நிலையின் யதார்த்தம்" கட்டுரை பயனளித்தது. டேவிட் அவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

* *

கலைப் புஸ்பா — பரந்தன்

மலையக மக்களின் கண்ணீர் தோய்ந்த வாழ்வைப் புதுப்பித்து உயிர் கொடுக்க முனைந்துள்ளது புதிய உலகம் பணிதொடரட்டும்.

● ●

க. பீற்றர் — பண்டாரவளை

புதிய உலகம் கடைசி இதழில் பல அச்சுப்பிழைகள் காணப்படுகின்றன கவனிக்கவும். தமிழ் மக்களின் அடிமை மனப்பாங்கை மாற்றிப் புதிய சமுதாயத்தினை உருவாக்கப் புதிய உலகம் முன்னின்று உழைக்க வேண்டும். செயற்கைக் கருத்தடை பற்றிய அடிகளார் குணசீலனின் கருத்துக்கள் பாராட்டத்தக்கவை.

மரினா சுகந்தி — நாரந்தனை

ஒற்றுமைபற்றி வாய்ப்பந்தல் போடுகிறவர்களை "நாய்களின் நட்பு" உருவகம் நயமாக விளக்கியது. நன்றி!

● ●

அ. நிரோஜன் — யாழ்ப்பாணம்

பிரித்தானிய நாட்டில் உள்ள சில விந்தையான ஊர்ப் பெயர்கள் பற்றிய செய்தியைப் படிக்கும்போது மிகவும் விறுவிறுப்பாக இருந்தது.

● ●

பெஞ்சமின் கிறேஸ் — முல்லைத்தீவு

அம்மா — பசிக்குதே நாடகம் முடிவடைந்துவிட்டதே. கவலையாகஉள்ளது. அமெரிக்கஅனுபவக் கட்டுரை எல்லோரும் புரியும்படி இலகுவாக அமைந்துள்ளது.

● ●

ஆர். எஸ். செல்வரத்தினம்
அல்வாய்

ஏமாற்றம் கதைமூலம் தமிழ்க்குமரன் நடைமுறை உண்மையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார் "புதுமைப்பதில்" அறிவுரைகளாலும் விளக்கங்களாலும் ஒருபடி மேலும் உயர்ந்துள்ளது போலுள்ளது. இதே நிலை பேணப்படட்டும்.

● ●

இமெல்டா சின்னத்துரை
நாரந்தனை

தரமான அம்சங்களைத் தவறாது வழங்கும் 'புதிய உலகம்'

தரம் குறைந்தமை கண்கூடு. மாதம் ஒன்ருக வெளிவரட்டும். குறுக்கெழுத்துப் போட்டிக்குவழி செய்யுங்கள்.

*      *

செபஸ்தியாம்பிள்ளை—தவசிக்குளம்

செயற்கையான சாதனங்கள் உண்மையான நிறைவை என்றுமே அளிக்கமுடியாது. இவை கெடுதல் விளைக்கக்கூடியவை. "நொருங்கிய இதயங்கள்" பகுதியின் கருத்துக்கள் என்றுமே அழிக்கமுடியாதவை. அவற்றை அலசி ஆராய்ந்தால் எமக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றன. அடிகளாரின் நற்பணி தொடரட்டும்.

*      *

ஜி. ஏ. டேவிட்—அடம்பன்

தற்போது நாகரிக நோக்கத்தில் மூழ்கியிருக்கும் மக்கள் கருத்தடையை ஒரு சாதாரண விடயமாகவே நினைக்கின்றனர். அதன் ஆபத்தை விளக்கி நல்ல கருத்துக்களை வழங்கிய அடிகளாருக்கு எனது நன்றி.

*      *

அ. வசந்தி—சில்லாலை

மாதம் ஒன்ருக வெளிவரும் போது விலையை 2/– ஆக உயர்த்தினல் வாசகர்களுக்குக் கடினமாக இருக்கும். இரு மாதங்களுக்கு ஒருமுறை 2/– ஆக இருப்பின் வரவேற்கின்றேன்.

*      *

வி. டென் குமார்—நாரந்தனை

புதுமை பரப்பிப் புத்தொளியுடன் புதிய பாதையூடே புதுமை உலகிற்கு எம்மை அழைத்துச் செல்லும் புதிய உலகு மாதமொருமுறை மலரப்போகும் செய்தியறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

*      *

திருமதி ஜி. யேசுதாஸன்
யாழ்ப்பாணம்

புரட்-ஐப்பசி இதழில் வெளியான 'சமுதாய அமைப்பில் சமூக நிலையின் யதார்த்தம்' என்னும் கட்டுரையில் "ஓர் உண்மைச் சம்பவம்" என்று,நான் காதால் கேள்விப்பட்ட விடயத்தைக் கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். இது பலரின் மனதைப் புண்படுத்தும் விடயமாகும். காதில் விழுந்த உரையாடலை வைத்துக் கொண்டு, சம்பவத்தைத் தானே நேரில் கண்டதுபோல் வர்ணித்து சமயத்தொண்டரின் பெயரைக் கெடுப்பது நியாயமா? புதிய உலகம் இப்படிப்பட்டவற்றைத் தவிர்க்கவேண்டும்.

தங்களது உணர்வுகளையும், நியாயமான கருத்துக்களையும் புதிய உலகம் வரவேற்கின்றது. அதேவேளையில் எழுத்தாளர்களின் சுதந்திரத்திற்கும் மதிப்பளிக்கின்றது. மேலும் சமூகத்தைப் பண்படுத்துவதே புதிய உலகின் நோக்கமன்றி எவரையும் புண்படுத்துவதல்ல. ஆயினும் தாங்கள் சுட்டிக்காட்டியவாறு குறிப்பிட்ட அச்சம்பவம் உண்மையல்லாத வெறும் உரையாடலே எனின் அதற்காக வருந்துகின்ருேம். அதேவேளை,

"படைப்புக்களுக்குப் பொறுப்பு
படைத்தவர்களே
கருத்துக்களுக்கு உரியவர் உரைத்தவர்
களே"

"*யாழ்*- பொதுசன நூலகம்" எனப் பெயர் தாங்கிநின்ற "அறிவுக் களஞ்சியம்" தனி நபருக்கோ, தனி நகருக்கோ சொந்தமான ஒன்றல்ல. அது உலகிற்கே உரிய எங்கள் தேசத்தின் சொத்து. அதைப் பயன்படுத்த உரிமை பெற்றிருந்த அனைவருமே அதைப் பாதுகாக்கவும் உரிமைபெற்றிருந்தனர். ஆனுல் அழிக்கப்பட்டுவிட்டது; எரிக்கப்பட்டுவிட்டது.

இப்போது மீண்டும் அதனைப் புனரமைக்கும் பொறுப்பு அனைவரையும் சார்ந்திருக்கின்றது. இம் முயற்சியில் முன்னின்று உழைக்குமாறு "புதிய உலக" வாசக நேயர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

இச் சந்தர்ப்பத்தில், புனரமைப்பதற்காக நிதி திரட்டிய யாழ்- பல்கலைக்கழக "மாணவர்அவை' யினருக்கு எமது வாழ்த்துக்களை வழங்குவதோடு இவற்றை நாட்டின் ஏனைய மாவட்டங்களுக்கும் முன்னெடுத்துச் செல்ல முயற்சி எடுக்குமாறு வேண்டிநிற்கிறோம்.

**தொடர்க தங்கள் தூயபணி!**

— ஆர் —

'நீதியற்ற அரசர்கள் கொள்ளைக் கூட்டங்களேயன்றி வேறல்ல."

## புதிய உலகம்

# சிறுகதைப் போட்டி

முடிவு திகதி: 20-1-82

1-ம் பரிசு 75/-

2-ம் பரிசு 50/-

3-ம் பரிசு 25/-

★ போட்டிக்கு அனுப்பப்படும் கதைகள் எமது நாட்டின் சமூக, பொருளாதார பிரச்சனைகளை மையமாகக் கொண்டு எழுதப் படல் வேண்டும்.

★ எழுதப்படும் கதைகள் முழுத்தாளின் 3½ பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

★ கதைகளை முழுத்தாளின் ஒரு பக்கத்திலேயே எழுதுக.

★ கதை எழுதுவோரின் பெயரோ முகவரியோ கதை எழுதப் படும் கடதாசியில் எழுதப்படாது; பிறிதாக எழுதிக் கதை யோடு இணைக்கப்படல் வேண்டும்.

★ கதைகள் எமக்கு அனுப்பிவைக்கப்பட்ட பின்னர் கதைகள் பற்றிய எதுவித தொடர்பும் எம்மோடு கொள்ளவேண்டாம்.

★ போட்டியின் முடிவுகளில் எமது தெரிவுக் குழுவின் தீர்ப்பே முடிவானதாகும்.

☆ பரிசுக்குத் தெரிவுசெய்யப்படாத—பிரசுரத்துக்கு தகுதியான கதைகள் புதிய உலகத்தில் தொடர்ந்து வெளியிடப்படும்.

★ கதைகள் திருப்பி அனுப்பிவைக்கப்படல் வேண்டும் என விரும்புபவர்கள் போதிய தபால் தலைகளை அனுப்பிவைக்க வும்.

★ கதைகள் அனுப்பி வைக்கப்படவேண்டிய இறுதி நாள் 20—01—1982.

★ போட்டிக் கதைகள் அனுப்பிவைக்கப்படும் உறைகளில் ''புதிய உலகம் சிறுகதைப் போட்டி'' என்று எழுதப்படல் வேண்டும்.

★ கதைகள் அனுப்பிவைக்கப்படவேண்டிய முகவரி :
ஆசிரியர், 'புதிய உலகம்', த. பெ. எண் 2, யாழ்ப்பாணம்.

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.